
"அன்பு அறிவு அகமகிழ்வோடு

இன்புற்றிருப்போம் எல்லோரும்"

# சுந்தரன்

கலை, இலக்கிய, சமூக ஏடு

மலர் - 2 - 1998 வைகாசி முழுமதி



ஒருவர்: பாவம் இந்த முதலாளிக்கு
என்ன கஷ்டமோ?

சி. கு: இடம்பெயர்ந்த வீடுகள் நாலு நல்ல
மலிவாய் அமத்திப்போட்டார். ஐஞ்சாவதும்
மலிவாய்க் கிடைக்கவேண்டும் எண்டு
ஆண்டவனை அழுது கேட்கிறார் பாவம்.

சொல் கனிவு!
விலை மலிவு!!

உங்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களும்
எம்மிடம் உண்டு....

உங்களுக்குத் தேவையற்றவைகளை
எப்பொழுதும் நாம் விற்பதில்லை!

E. S. PERAMPALAM
& CO.

50, 52 & 54. KASTHURIAR ROAD.
JAFFNA.

# வாழ்க்கைப் போர்!

– த. ஜெயசிலன்

நிலவை நீ நேசி .. நெருப்புடனே உறவாடு!
காற்றை அணை கைகுலுக்கு!
கடலலையோடு அசைந்தாடு!
காலைப் பனிப்புகாரில் கவிதைப் புழுதிவிதை!
சூரியனின் சூட்டோடு தோழமைகொள்.
அவனொளியில் தோய், உயிர்ப்பாய்.
புயலைத் தொடு 'தெளிவாய்'.
சிலிர்க்கவைக்கும் மண்மகளைக் காதல்செய்.
மழைவாசம் தனைப் புணர்!
பூக்களினைக் கொஞ்சிநீ புனிதமடை வண்டொடு
தேனீக்களிடம் 'சமதர்ம' இசைபயின்று அமைதிபெறு
ஆர்விரும்பாத போதும் தான்நினைத்த மாத்திரத்தில்
கூவும் குயிலுணர்வைக் குறித்துக்கொள்;
அதற்காக ஏங்கு!
வானப் புத்தகத்தில் வரலாற்றை அறிந்தேசெல்:
நாள்த் துயர் நினையா நாற்றைப்போல் சிரித்துக்கொள்.
நீந்துவதும் உச்சுவதும்
நிலையெடுத்துத் தாக்குவதும்,
'வாழ்க்கைப்போர்' ஜெயித்துக்கூர்ப்படையும் வழிமுறையும்,
விலங்கிடம் நீ கற்று உணர்!
வியூகத்தை வகுத்துப் பாய்.
தானாய்த் தலையெடுத்துச் சாகுமட்டும் தன்காலில்
வாழும் மரங்களிடம்
'மெய்ப் பொருளை' கேட்டு உணர்-
'எல்லா நடப்பு' அறிந்தும் எதும் பறையாதுஇருந்துஆட்டும்
இயற்கையதே தெய்வம்; நிதம் ஏற்று!
டேய் தம்பி
இவ்வளவும் உன் சுற்றம்! இருள் உனக்காய் விடிவதுகாண்!
'சுற்றம் துணை எனக்கு இல்லை எனச் சுருண்டு ஏன்
செத்தவன்போல் நீ ஏன் சிறை புகுந்தாய்?
பார்!
பள்ளம் இத்தரைக்கும் உண்டு!
அது அழுது மடிகிறதா? எழு! பாடு!
சுத்தம் இரத்தம் உள்ளவன் நீ துவள்வதுவா?
நிமிந்து நில்! வாழ்ந்து பார்!



# சுந்தரன்

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

முழுமதி இதழ் 2
11-05-1998

நெறியாள்கை:

சொக்கன்
சிவராமலிங்கம்
செங்கை ஆழியான்

ஓவியம்: ரமணி

இணை ஆசிரியர்:
த. ஜெயசீலன்

ஆசிரியர்: கௌதமன்

வெளியீடு:

போஸ்கோ பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை: 15/-


## ஒன்று சொல்ல வேண்டும்

வாசக நேயர்களுக்கு!

10-04-98 முழுமதி அன்று,
சுந்தரனின் அறிமுக நிகழ்வு
நல்லைக் குருமணியின் நல்லாசியுடன்
நல்லை ஆதீனத்திலே நடைபெற்றது.

சுந்தரனின் தோற்றத்திற்கு
ஆக்கத்தோடு அருள்தந்த
பெருமனத்தோர்:
சொக்கன் ஐயா
சிவராமலிங்கம் ஐயா
செங்கை ஆழியான்
இணை ஆசிரியர் த. ஜெயசீலன்
நிகரில்லா ஓவியர் ரமணி
கே. ஆர். டேவிட்
செல்வி சொக்கலிங்கம் வாசுகி
இவர்களுக்கு
தானாகச் சென்று என்
தலை வணங்குகிறது.

அன்று மேடையேறி வாழ்த்திய
பெருமனிதர் வரதர்
நிகழ்வுக்கு வருகைதந்த
பெருந்தகைகள்
கேட்கமுன்
விளம்பரம் தந்துதவிய
வினோ நகைப்பூங்கா
லிங்கம் கிறீம் ஹவுஸ்
அல்டி - ஆகிய வர்த்தகர்களுக்கும்
என்நினைவில் நிற்கும் நன்றிகள்.

என்னில்லம் நாடிவந்து
மனதார வாழ்த்தி
தங்கள் பத்திரிகையில் இடம்தந்த
உதயன் ஆசிரியர் கானமயில்நாதன்
மகிழ்முகத்தோன் வித்தி - இவர்களை
சுந்தரன் என்றும் நினைத்திருப்பான்.

- ஆசிரியர்

# வங்கி நினைப்பு...

வண்டுகள் உண்டுமகிழ
பூக்களைப் பூத்துச் சிரிக்கிறது செடிகள்.

உயிரினம் உண்டுமகிழ
நீர்தேடி, வேரோடி,
கனிகொடுத்து மகிழ்கிறது மரம்!

ஆறு சிலிர்த்து ஓடுகிறது
பூமி செழித்து சிரிப்பதற்கு!

வானம் குளிர்ந்து பொழிகிறது
வயல் நிமிர்ந்து சிரிப்பதற்கு!

மனமிழகி பால் சுரக்கும்போது
உயிரில் பரவும் உன்னத இன்பத்தில்
உலகம் முழுதாய்ச் சிரிக்கின்றாள் அன்னை!

முகம் புதைத்து, காலுதைத்து
எழுச்சியில் சிரிக்கிறது குழந்தை!

இயற்கை முழுவதும் மகிழ்ந்து சிரிக்கிறதே
மகிழ்ச்சியை அள்ளிக் கொடுப்பதில்தானே!

மனிதன் மட்டும்தான் இயற்கையோடு
முரண்பட்டு நிற்கிறான்!

ஒன்றும் கொடாமல்
எல்லாம் பெற நினைக்கின்றான்!

கொடுக்கும் போது கூட ''வாங்கலை''ப்பற்றி
வட்டியோடு நினைக்கிறான்!

தன்குஞ்சுக்கு ஒன்றென்றால்
வெறிநாயையும் எதிர்த்து நிற்கிறது கோழி!

தன் ஊன்சுருக்கி தீன்பொறுக்கி
ஊட்டுகிறது குஞ்சுக்கு!

தான் பேர்ட்ட தீனிக்காக - குஞ்சை
கூடுகட்டி தன்னைக் காக்கும்படி
எந்தக்கோழியும் கூக்குரலிட்டு அழுததில்லை!

இந்தக் கோழியும் குஞ்சாய் இருந்தபோது
அதன் தாய்க்கோழியும் இப்படித்தான் காத்தது!

தாமுண்ட நீரை தென்னை
தலையாலே தருவதுபோல்:

ஆனால், மனிதன் மட்டும் தர்ன்
இயற்கையோடு முரண்பட்டு நிற்கிறான்!

வாழ்க்கையையும் சந்தைக்கு
ஓட்டிச்செல்லத் தொடங்கியுள்ளான்!

பிள்ளைக்குச் சோறூட்டும் போதும்
'பின்னுக்கு உதவும்' என்று நம்புகிறான்!

புண்ணியம் கிடைக்குமென்றுதான்
பிச்சையே போடுகிறான்!

கோபுரம்கட்ட நிதி கொடுக்கிறான்;
''கோடி இலர்பம் கொடு'' என்று கும்பிட்டபடி!

சொந்த தேசம் பட்டுப்போனாலும்
தேகம் கெட்டு மோசம் போனாலும்
மரமாக, இயந்திரமனிதனாக (Robo)
பணம்காய்க்க பரதேசம் போகிறான் பிள்ளை!

தொலைபேசியில் சம்பிரதாய
பேச்சுக்கள் பல மணி நேரம் பரிமாறப்படும்
இறுதிநேர நிமிசத்தில்
நிசமாவது இலட்சம்பற்றிய பேச்சே!

ஐந்து பிள்ளை பெற்றும்
இறுதிப்படுக்கையில்
நெஞ்சு தடவிக் கொடுக்க பிள்ளை இல்லை!
பெற்றவள் இறந்து போக தந்திபோகும்.
கொள்ளி வைக்க, கூலிக்கு ஆள்பிடிக்க
பிள்ளை 'தான்' அனுப்புவான்; பிணம் எரியும்!

உறவுகளுக்குள்ளும்
பெறுவது மட்டும் என்பதும்;
கொடுக்கும் போதெல்லாம்
'வாங்கலை'ப் பற்றிய வங்கி நினைப்பும்;
மகிழ்ச்சியை நோக்கிய வர்ழ்வு
வழிதவறி துன்பத்துள் இழுத்துப்போகிறது!

# கடவுளும் ஏமாந்தான்

அந்தக் கப்பல் தனதுதாயகத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தது.

திடீரென்று கடல் கொந்தளித்தது. புயல் காற்று வீசியது. கப்பல் மூழ்க ஆரம்பித்தது. கப்பலில் இருந்த அனைவரும் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர்.

இந்த சமயத்தில் யார்தான் பிரார்த்திக்காமல் இருப்பார்கள்? ஒரு நாத்திகன் கூட. ''நான் இதுவரை கூறியவற்றிற்காக என்னை மன்னித்து விடு, எப்படியும் என்னைக் கரைசேர வைத்து விடு'' என்று பிரார்த்திக்க ஆரம்பித்து விடுவான்.

ஆனால் ஒரு மகமதியத் துறவி மட்டும் வழிபடாமல்வெறுமனே அமர்ந்திருந்தார். பயணிகள் கோபம் கொண்டனர்.

''நீ ஒரு மதப்பற்றுள்ளவன். அங்கி அணிந்துள்ளாய். சூஃபிகள் அணியும் பச்சைநிற அங்கியணிந்துள்ளாய். நீயும் ஒரு துறவியா? நீ தானே பிரார்த்தனை செய்யும் முதல் மனிதனாக இருந்திருக்கவேண்டும்?''

அவர்கள் மேலும் கூறினர்;

''நாங்கள் எல்லோரும் மதப்பற்று உள்ளவர்கள் அல்ல. நாங்கள் எல்லோரும் வெறும் வியா



பாரிகள். மேலும் பிரார்த்தனை என்பது கூட எங்களுக்கு வியாபாரத்தைப் போன்றதுதான். கடவுளே, நாங்கள் அதைக் கொடுக்கிறோம், இதைக்கொடுக்கிறோம், எங்களைக் காப்பாற்று, என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஏன் மௌனமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்? நீங்கள் ஏன் வழிபடவில்லை?''

அதற்கு அவர், ''நீங்கள் ஏற்கனவே கூறிவிட்டீர்கள், நான் ஒரு வியாபாரி என்று. கடவுள் நம்மையெல்லாம் முடிவுகட்ட விரும்பினாலும் நல்லது. அவர் நம்மை யெல்லாம் காப்பாற்ற விரும்பினாலும் நல்லது. நான் அவரோடு முழுவதுமாக ஒத்துப் போகிறேன். நான் ஏன் வழிபட வேண்டும்? எதற்காக வழிபட வேண்டும்?''

''வழிபாடு என்பது கொஞ்சம் ஒத்துப் போகாத தன்மை. நீ நடக்கக் கூடாது என்று விரும்புகிற ஏதோ ஒன்று நடக்கிறது. அதில் கடவுள் தலையிடவேண்டும், அதை நிறுத்த வேண்டும், அதை மாற்ற வேண்டும் என்று நீ விரும்புகிறாய்.

எனக்கு எந்தவித வியாபாரமும் இல்லை. நம்மைக் காப்பாற்ற வேண்டுமா, மூழ்கடிக்க வேண்டுமா என்பது கடவுள் கவலைப்படவேண்டிய ஒன்று!'' என்று சூஃபி கூறினார்.

அவர் மேலும், ''கடவுள் இந்தத் துறவியைக் காப்பாற்ற விரும்பினால் அது அவரது வேலை, அது என்னுடையதல்ல. அதே போல் அவர், நான் இறந்து போக வேண்டும் என்று விரும்பினாலும் அது அவரது வேலை.

நான் பிறப்பதற்கு, அவரிடம் கேட்கவில்லை. திடீரென்று இந்தப் பூமிக்கு வந்தேன். ஆகவே மரணத்தைப் பற்றியும் நான் கேட்க முடியாது. எப்போது எனது பிறப்பு என்பது

என் கையில் இல்லையோ அப்போது எப்படி மரணத்தை என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்?'' என்று கூறினார்.

'இந்த மனிதன் பைத்தியமாக இருக்க வேண்டும்' என்று அவர்கள் எண்ணினர். ''உங்களை நாங்கள் பிறகு கவனித்துக் கொள் கிறோம். நீங்கள் ஒரு துறவியே இல்லை. உங் களிடம் மதப்பற்று இல்லை. நீங்கள் அபாய கரமான மனிதர். ஆனால் கவலைப்படவும், உங்களோடு சண்டை போடவும் இது நேர மல்ல!'' என்று கூறிச்சென்றனர்.

அந்தக் கப்பலில் மிகவும் புகழ் வாய்ந்த செல்வம் உள்ள ஒருவன் லட்சக்கணக்கான வைரங்களுடனும், விலையுயர்ந்த இதரபொருள் களுடனும் வந்து கொண்டிருந்தான். அவன் நிறையச் சம்பாதித்திருந்தான்.

நகரத்தில் ஒரு அழகான அரண்மனை அவ னுக்கு இருந்தது. மிகவும் அழகான சலவைக் கல் மாளிகை. அரசனே மாளிகையைப் பார்த் துப் பொறாமை கொண்டுள்ளான். அந்த அர சனே பல சந்தர்ப்பங்களில், ''என்ன விலை யானாலும் பரவாயில்லை, நான்அதைக் கொடுக் கத் தயார். நீ இந்த மாளிகையை எனக்குக் கொடுத்து விடு'' என்று கேட்டுள்ளான்.

ஆனால் அந்த மனிதன், ''அது முடியாது, அந்த மாளிகைதான் எனக்குப் பெருமை'' என்று மறுத்துவிட்டான்.

இப்போது அந்தக் கப்பல் மூழ்கிக்கொண்டி ருக்கும் போது அந்த மனிதன் கடவுளிடம்,


''கடவுளே! அந்த மாளிகையை உனக்குக் கொடுத்து விடுகிறேன். என்னைக் காப்பாற்று'' என்று கூறினான்.

அதே போல் நடந்தது. காற்று மறைந் தது. கடல் அமைதியானது. கப்பல் காப்பாற் றப்பட்டது அவர்கள் எல்லோரும் கரைசேர்ந் தனர்.

கப்பலில் அப்படிச் சொன்னது அந்தப் பணக்காரனுக்கு இப்போது மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது.

முன்பு அந்தத் துறவி மீது கோபப்பட் டான்; ஆனால் இப்போது கோபப்படவில்லை.

மாறாக, ''ஒருவேளை நீங்கள் கூறியது போல் மௌனமாக இருந்திருந்தால் நல்லது. உங்களை நான் பின்பற்றியிருந்தால் என்னு டைய மாளிகையை இழந்திருக்க மாட்டேன்! ஆனால் நான் ஒரு வியாபாரி. இதற்கு ஏதா



அவர்– கம்பஸ் பெடியனை மாப்பிளையாய்ப் பார்த்தது பிரச்சினையாய்ப் போச்சு ..

அவள் - ?

அவர்- பொம்பிளை வீட்டார் எல்லோரையும் தோப்புக்கரணம் போடச் சொல்லி அடம்பிடிக்கிறார்.

— தமிழினி —

வது ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறேன்'' என்று கூறினான்.

அதே போல் கண்டு பிடித்தான்.

மறுநாள் அந்த மாளிகையை அவன் ஏலம் விடுவதாக அறிவித்தான். பக்கத்தில் உள்ள அரசர்களுக்கு எல்லாம், யாரெல்லாம் ஆர்வம் கொண்டுள்ளார்களோ அவர்களுக்கெல்லாம் தெரிவித்தான்.

அரசர்களும், அரசிகளும், செல்வந்தர்களும் வந்தனர்.

அந்த அரண்மனையின் முன்னால் சலவைக் கல் தூணில் ஒரு பூனை கட்டப்பட்டிருந்தது. அதைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் அடைந் தனர்.

அந்தப் பணக்காரன் வெளியில் வந்தான்.

''இந்த அரண்மனையும் பூனையும் சேர்த்து ஏலம் விடப்படும். இந்தப் பூனையின் விலை ஒரு மில்: டாலர்! இந்த அரண்மனையின் விலை

ஒரு டாலர்!. மொத்தம் ஒரு மில்லியன் ஒரு டாலர்'' என்று கூறினான்.

கூடியிருந்தவர்கள், ''இந்தப் பூனைக்கு ஒரு மில்லியன் டாலரா? அரண்மனைக்கு ஒரு டாலரா?'' என்று கேட்டனர்.

அதற்கு அந்த வியாபாரி, ''நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். விரும்பினால்இந்த இரண்டையும் சேர்த்து வாங்குங்கள். அதற்குக் குறைவாக நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இது தான் குறைந்த விலை. யாருக்காவது ஆர்வம் இருந்தால் வாங்குங்கள்'' என்று கூறினான்.

அந்த நாட்டின் அரசன், ''சரி, நான் அந்த விலையைக் கொடுக்கிறேன், ஆனால் தயவு செய்து இந்தப் பூனையையும் அரண்மனையையும் சேர்த்து ஏலம் விட்டதன் ரகசியத்தைக் கூறுவாயா?'' என்று கேட்டான்.

வியாபாரி சொன்னான்,

''இதில் ரகசியம் ஏதும் இல்லை. நான் ஒரு பிரார்த்தனை செய்து அதனால் சிக்கலில் மாட்டிக் கொண்டேன். நான் கடவுளிடம் உனக்கு இந்த அரண்மனையைக் கொடுக்கிறேன் என்று கூறினேன். நான் ஒரு வியாபாரி. அவர் ஒரு வியாபாரியாக இருந்தால் நானும் ஒரு வியாபாரிதான்! பூனை ஒரு மில்லியன் டாலர்; அதை நான் வைத்துக் கொள்வேன். இந்த அரண்மனை ஒரு டாலர்; அது கடவுளின் நிதிக்குப் போய்விடும்.''

- ரிசி ஓசோ

**பேராசை பிடித்த வியாபாரி**

இதயத்தை குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, இதயம் இருந்த இடத்தில் இரும்புப் பெட்டியை கொண்டு அலையும் விசித்திரப் பிராணி.

சிரித்திரன் சுந்தர்

நட்பின் மரணத்தை விட
நண்பனின் மரணத்தைச்
சகித்துக் கொள்ளலாம்.



# திறவுங்களேன் உங்களைத்தான்!

திறவுங்களேன்......
உங்களைத்தான்!

திறப்புத் தொலைந்ததா
விருப்பம் இல்லையா?

பிறரைத் திறந்து
அடிவரை காணும்
விடுப்புக்குக் குறைவில்லை!
கள்ளத் திறப்புகளும்
பாவனையில்!

உங்களைத் திறக்கமட்டும்
ஏன் தடை?
விருப்பமில்லை
மூடிய கனவு
சுகம்விட விருப்பமில்லை!

திறப்பு
புதிதாய் செய்யலாம்
பூட்டையும் உடைக்கலாம்;

விருப்பம் வேண்டும்;
விருப்பம் இன்றி
சுய
தரிசனம் இல்லை!
அது இல்லாமல்
மேம்பாடில்லை!

- சண்முகபாரதி


# உலக அதிசயங்கள்

புராதன காலத்தின் ஏழு அமைப்புகளை அதிசயங்களாக விபரிக்கத் தொடங்கியது கி.மு. 2 ஆம் நூற்றாண்டுகளின் அடுத்த அலெக்ஸாண்டிரியனின் காலத்தில் தான். சிடோவின் ஆன்டிபட்டர்தான் ஏழு அதிசயங்கள் குறித்த பட்டியலை உருவாக்கியவர். ஆன்டிபட்டர் ஒரு பயணக்குறிப்பு எழுதியிருந்தார். அதில் குறிப்பிட்டுள்ள அற்புதங்கள் யாவும் கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதிகளில் இருந்தவையாகும். அவர் குறிப்பிட்ட ஏழு அற்புதங்கள் வருமாறு:

1. காஃபூவில் பிரமிடு: எகிப்தில் நைல்நதியின் மேற்குக்கரையில் அமைந்துள்ளது. இது பன்னிரெண்டு ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்து கிடக்கின்றது. கி. மு. 2690 இல் தான் இது கட்டப்பட்டது. இதற்குரிய இடத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே பத்து வருடங்கள் ஆயின. ஒரு இலட்சம் பணியாளர்கள் 20 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்து மன்னரின் கல்லறைப் பணியை (Tomb) முடித்தனர். இதன் உயரம் 481 அடி. மன்னரின் சடலம் கெட்டுப்போகாமல் இருக்க பலவித தைலங்கள் சடலத்தில் பூசப்பட்டு, பிரமிடின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளது. இடிபாடுகள் ஏற்பட்ட போதிலும் இன்றும் நிலைத்து நிற்கிறது.

சிங்க மனிதனின் சிலை
(Sphinx of Gizeh)

சிங்கத்தின் உடலும், மனிதனுடைய தலையும் கொண்ட கல்லில் செய்யப்பட்ட இச்சிலையின் நீளம் 1725 அடி. உயரம் 66 அடி. கி.மு. 3750 இல் உருவாக்கப்பட்ட இது மிகப்பெரிய பிரமிடின் அருகில் உள்ளது.



அலெக்சாண்டரியா தீபஸ்தம்பம் வாஷிங்டன் நினைவு மண்டபம் எம்பயர் ஸ்டேட் பில்டிங்

2. பாபிலோனிய தொங்கும் தோட்டம்
(The Hanging Garden of Babylon)


கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இரண்டாம் நெபுசத் நைசர் என்ற மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பாபிலோன் மிகப்பெரிய நகரமாக இருந்தது. அடுக்கடுக்கான மாடிகளில் உருவாக்கப்பட்டதுதான் இந்தப் பூந்தோட்டம். உயரத்தில் உள்ள செடிகளை நனைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது முழுமையும் அழிந்து விட்டது.

3. ஜுயுஸ் சிலை
(The Statue of Zeus at Olymbia)

சுமார் கி.பி. 463 இல் கிரீக் சிற்பி ஃபீடியாஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. பளிங்குக் கற்களால் செய்யப்பட்டுள்ள இந்த சிலைகள் யானைத்தந்தம் மற்றும் தங்கத்தால் மூடப்பட்டிருந்தது. இதன் உயரம் 40 அடி. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் கீழே விழுந்ததையடுத்து, இது கான்ஸ்டான்டினோபிளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. காலச் சுழற்சியில் மண்ணோடு மண்ணானது.

4. எபிஸஸில் அர்டிமிஸ் தேவாலயம்
(Temple of Artemis at Ephesus)

டயானாவின் தேவாலயம் என்றும் இதைக் கூறுவர். கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் மாவீரன்



ஹாகியாஸோஃபியா காஃபீரில் பிரமிடும் சிங்க மனித உருவும் தாஜ்மகால்

அலெக்சாண்டரின் காலத்தில் ஆசியா மைனரில் இதன் வேலைகள் முடிவடைந்தன. இது பளிங்குக் கற்களால் ஆனது. சுமார் 342 அடி நீளமும், 164 அடி அகலமும், 60 அடி உயரமும் உள்ள 127 மிகப்பெரிய தூண்களைக் கொண்டிருந்தது. கி.பி 262 இல் அழிந்துவிட்டது.

5. ஹாலிகர் நஸ்ஸார் கல்லறை
(The Mausoleum at Halicarnassus)

ஆசியா மைனரில் ஆர்ட்டிமிஸியர் அரசி தன்னுடைய கணவர் கரியயிலே மௌஸோலஸ் மன்னரின் நினைவிற்காக கி.மு. 352 இல் கட்டியது. பளிங்காலான இக்கல்லறை 140 அடி உயரமுள்ளது. வட்ட வடிவமுடையது. ஒரு பூகம்பத்தால் அழிந்துவிட்டதாக தெரிகிறது.

6. ரோட்ஸின் கொளோஸஸ் சிலை
(The Colossus of Rhodes)

சூரியபகவான் ஹெலியோஸின் பித்தளைச்சிலை. உயரம் 105 அடி. கி.மு 280 இல் உருவாக்கப்பட்டது சுமார் 13 வருடங்கள் இதன் வேலைகள் நடைபெற்றன. கி மு. 224 இல் ஒரு பூகம்பத்தில் இது மறைந்தது.

7. அலெக்சாண்டரியா தீப ஸ்தம்பம்
(The Pharos of Alexandria)

எகிப்தில் அலெக்ஸாண்டரியா துறைமுகத்தின் அருகில் ஃபரோஸ் தீவில் இது அமைந்துள்ளது கி மு. 247 க்கு முன்பு உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இதன் உயரம் 200 அடி. பூகம்பத்தில் முழுவதும் அழிந்துவிட்டது.

### மத்திய காலத்தின் ஏழு அதிசயங்கள்

1. ரோமின் கொலோஸியம்
(Colosseum of Rome)

ரோம மக்களின் வேடிக்கை விளையாட்டுக்களுக்காக கட்டப்பட்டது. குகைகள், அறைகள்மட்டுமல்லாமல் நிகழ்ச்சியைக்காண வருபவர்களுக்கு இருப்பிட வசதியும் கொண்டிருந்தது. பிரகடனம் நடத்துவதற்குரிய அரங்கமாகவும் இதைப் பயன்படுத்தலாம். தண்ணீர் கொண்டு இவற்றை நிரப்பவும் முடியும். கடலில் போர் நிகழ்ச்சிக்கு முன்னோடியான பயிற்சிக் களமாக இது பயன்படுத்தப்பட்டது. குற்றவாளிகளை விலங்குகளுக்கு உணவாக்கவும் இவ்வரங்கு பயன்படுத்தப்பட்டது.

2. அலெக்ஸான்டிரியாவின் குகைகளும் / சுரங்கப்பாதைகளும்
(The Catacombs of Alexandria)

லிபியன் மறுபூமியின் முடிவில் அமைந்துள்ளது. முன்பு கிருத்துவ அகதிகள் இந்தப் பாதையை உபயோகித்து வந்தனர். தற்பொழுது இது முழுமையும் அழிந்துவிட்டது.

3. சீனப் பெருஞ்சுவர்
(The Great Wall of China)

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இதன் வேலைகள் ஆரம்பமாயின. இதன் கட்டுமானப் பணிகள் மிகநீண்டகாலம் நடைபெற்றது. (கி.பி. 14 ம் நூற்றாண்டு வரை) இது வடக்கு சீனாவில் சுமார் 1500 மைல் வரை நீண்டு கிடக்கிறது அன்னியப் படையெடுப்பை தடைசெய்வதற்காக இது கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. மிகக் சொடூரமான டர்கர் இன மக்களை, நாகரீகமுள்ள சீன மக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இது கட்டப்பட்டதாகவும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

4. கற்களால் ஆன வட்டங்கள்
(Stone Henge)

நியோலிதிக் காலத்தில் இங்கிலாந்தில் சாலீஸ் பரி சமவெளியில் சூரிய பகவானை வழிபடுவதற்காகக் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் இதன் சரித்திரம் நிர்ணயிக்கப்பட்டபோது மத்திய காலத்தின் அதிசயங்களின் பட்டியலில் இருந்து இது நீக்கப்பட்டது.

5. போர்சீலியன் கோபுரம்
(The Procelain Tower of Nanking)

சீனாவில் நான்கிங் என்ற இடத்தில் இருந்த இந்த கோபுரத்தை (வகோசா என்றும் கூறப்படும்) 1858இல் தெய்விங்க் புரட்சிக்காரர்கள் நாசம் செய்தனர். இது பதினைந்தாம் நூற்

உயரமான கட்டிடம்:- சிக்காக்கோவிலுள்ளது. சியேர்ஸ்ரவர் இது 110 மாடிகள் உள்ளது. உயரம் 443 மீட்டர்.


றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன் உயரம் 260 அடி.

6. பைசா நகர கோபுரம் (The Leaning Tower of Pisa)

இத்தாலியில் பைசா (பிஸா நகரம்) நகரத்தில் உள்ள இந்த கோபுரப் பணிகள் கி.பி. 1174 இல் தொடங்கப்பட்டன. 1350 இல் இதன் வேலைகள் முடிவடைந்தன. இதன் அருகில் உள்ள தேவாலயத்தின் மணி மாளிகையாக இதைக் கட்டினர். இதன் உயரம் 179 அடி. இது எட்டு அடுக்குகளைக் கொண்டது. இந்தக் கோபுரம் சிறிது சிறிதாக சரிந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது சரியான இருப்பிலிருந்து சுமார் 16 அடி சரிந்து நிற்கிறது.

7. கான்ஸ்டான்டிநோபிளின் ஹஸியா சோஃபியா [Hazia Sophia (Sancta Sophia of Constantinopole]

துருக்கியில் உள்ள இந்த கிருத்துவப்பள்ளி கி.பி. 537-54 இல் ஜஸ்ட்டினியன் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. 1453 இல் துருக்கிய சுல்தான் இரண்டாம் முகம்மது கான்ஸ்டான்டிநோபிளை கைவசப்படுத்தியதுடன் இதை ஒரு முஸ்லீம் பள்ளியாகவும் மாற்றினார். தற்பொழுது இது ஓர் கலை அருங்காட்சியகமாக உள்ளது.



ரோட்ஸின் கொளோஸஸ் சிலை   ஈஃபில் கோபுரம்   ஜுயுஸ் சிலை

## தற்காலத்தின் ஏழு அதிசயங்கள்

1. எகிப்தின் பிரமிடுகள்
2. ஹஸியா ஸோஃபியா
3. பைசா நகர கோபுரம்

4. தாஜ்மகால் (இந்தியா)

ஷாஜஹான் சக்கரவர்த்தி தன்னுடைய மனைவி மும்தாஜின் நினைவாக எழுப்பிய கல்லறை 1648இல் கட்டப்பட்டது. (1631 ஆம் ஆண்டு என்றும் கூறப்படுகிறது).

5. வாஷிங்டன் நினைவு மண்டபம் (வாஷிங்டன்)

1885 இல் முன்னாள் அமெரிக்க அதிபரின் நினைவிற்காகக் கட்டப்பட்டது. 555 அடி $5\frac{1}{8}$ அங்குலம் உயரம் உள்ளது.

6. ஈஃபில் கோபுரம் (பாரீஸ்)

1847 -- 1889 இல் கட்டப்பட்டது. 948 அடி உயரமுள்ளது.

7. எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ் (நியூயார்க்)

1931 இல் கட்டப்பட்டது. இதன் உயரம் 1477 அடி. 1951 இல் 222 அடி உயரமுள்ள ஒரு தொலைக்காட்சிக் கோபுரமும் இத்துடன் இணைத்து நிறுவப்பட்டுள்ளது.

உலக அதிசயங்களைத் தேர்ந்தெடுப்பதில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்கள் எதுவும் இல்லை. காலம் காலமாக ஏதாவது ஒரு காரணம்பற்றி வழங்கப்பட்டன. இன்றும் இந்த நிலையே தொடர்கிறது.

நன்றி: மனோரமா

---

## ஊர் விடுகதைகள்

1) பறவையின் பெயரும் ஒரு பழங்காலத்து ஆயுதத்தின் பெயரும் இணைந்த ஊர் எது?

2) பறவையின் பெயரும், மரத்தின் பெயரும் சேர்ந்த ஊரின் பெயரென்ன?

3) ஒரு ஆணின் பெயரும், குளிக்கும் இடமும் ஒழுங்கே அமைந்த ஊர் எது?

4) ஒரு மனித உறுப்பொன்றின் பெயரும், ஒரு பொருளும் சேர்ந்து வரும் ஊர் எது?

5) மனிதனின் இன்றியமையாத பொருளும், ஒரு ஊரின் பெயரும் கொண்ட ஊர் எது?

(விடைகள் 21ம் பக்கம் பார்க்க)

# உயிரோடு கலந்த.....



**- சந்திரவாணி -**

பாடசாலையால் வந்தவுடன் மேசையை ஓடிப்போய் பார்த்தாள் பிரியா. அவளது அப்பாவின் கடிதம் வந்திருக்கும் என்ற நினைப்பில். ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு மணிக்கு பாடசாலையால் வந்தவுடன் மேசையை ஒரு தடவு தடவுவது அவளது வழக்கம். அன்றும் கடிதம் உடைத்து மேசையில் இருந்தது.

'அம்மா அப்பாவின் படம் வந்திருக்கு பாத்தீங்களா?' என்று கூவியபடி இரண்டு படங்களைக் கையிலெடுத்துக் கொண்டு தாயிடம் ஓடிவந்து முகத்துக்கு நேரே மூக்கில் படங்களை உரசியபடி நீட்டினாள்; அப்பொழுதுதான் 'சேலை மாற்ற அறைக்குள் நுழைந்திருந்தாள் விக்கி.

'ஆ ... நான் முதலில் பார்த்து விட்டேன் உனக்காகத்தான் அதில வைச்சேன், நீயே வைச்சு நல்லாக் கொஞ்சிக் கொஞ்சிப் பார்' என்றாள் செல்லமாக.

பிரியாவுக்கு அப்பாவை நேராகத் தெரியாவிட்டாலும் அடிக்கடி படங்களில் பார்த்துப் பார்த்து ஒருவித பாசம், தவிப்பு,

பிரியர்வுக்கு ஏழுவயதாகிறது. அவள் வயிற்றிலிருக்கும் போது ஆனந்தன் சுவிஸ் போனவன் பிள்ளைக்கு இன்னும் தகப்பனைத் தெரியாது. அவ்வப்போது கடிதங்களோடு வரும் படங்கள்தான் அவளுக்கு தகப்பனின் அடையாளங்களைக் காட்டிக் கொடுக்கும்.

அம்மாவும், பிள்ளையும் படுக்கும்போது, 'அம்மா, அப்பா என்னைப்பற்றி என்ன கேட்டு எழுதினவர்' என்று தொடங்குவாள். விக்கியும் 'என்ர குஞ்சு என்ன செய்கிறாள், அப்பாவைக் கேட்பாளா? ஸ்கூலுக்குப் போறவளா ? அப்பாவின்ர பெயரை எழுதுவாளா ?என்று உன் அப்பா கேட்டு எழுதியிருந்தவர்' என்று ஒரே கடிதக் கதையே, தூக்கம் வரும்வரை இருவருக்கும் இடையில் காயத்திரி மந்திரம்போல மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருக்கும்.

ஆனால் அன்று வந்த கடிதம் அப்படியில்லை. சீரியசானது பலமுறை முயற்சி செய்தும் முடியாமல் தடங்கலாகப் போனது இப்போதுதான் நிறைவேறியுள்ளது. 'ஸ்பொன்ஸர்' எல்லாம் செய்து விக்கிக்கும், பிரியாவுக்கும் விசா கிடைத்துவிட்டது. இனி கொழும்பு போக ஆயத்தங்கள் செய்யவேண்டும். அன்று இரவு நித்திரையே வரவில்லை விக்கிக்கு.

'அம்மா... அப்பா என்ன கேட்டெழுதினவர்... என்று ஏதேதோ அலட்டிக்கொண்டே இருந்தாள் பிரியா... ஆனால் விக்கிக்கு அதெல்லாம் கேட்கவில்லை.

ஏழு வருடங்களுக்குப்பின் முதன்முதலாக தன் கணவனைச் சந்திக்கப் போகிறோமே என்ற தவிப்பு அவள் உள்ளத்தை ஏதோ செய்துகொண்டிருந்தது. எவ்வளவு தூரம்; எல்லாம் சரியென்றாலும் நினைத்தவுடன் போகமுடியுமா ?எத்தனை தடைகள் – எத்தனை அலுவல்கள் .. பார்க்க வேண்டும்.

நாளை எழும்பி எங்கு எங்கு போக வேண்டும் என்று ஒரு புறோக்கிராமே அவள் நினைவில் தயாராகிக்கொண்டிருந்தது.

விதானையைச் சந்திக்க வேண்டும், குடும்ப அட்டையைக் கொடுக்க வேண்டும், பிரிகேடியரைச் சந்திக்க வேண்டும். சிவில்அபயஸ் ஒப்பீசுக்குப்போக வேண்டும்.

அப்பப்பா தன்னந்தனியாக எத்தனை அலுவல்கள்

உண்மையான அழகுள்ள பெண்; ஓர் இளைஞனை மனமுதிர்ச்சி அடையச்செய்ய முடியும். முதியவனை இளைஞனாக உணரும்படி செய்யமுடியும். ஒரு நடுத்தர வயதுக்காரனை தன்னம்பிக்கை உடையவனாக்க முடியும்.

A woman with true charm is one who can make a youth feel mature, an oldman youthful; and a middle aged man completely sure of himself.

BOB TALBERT

பார்க்க வேண்டும். அவளுக்கு உதவிகள் இல்லை என்று சொல்வதற்கல்ல... பலர் இருக்கிறார்கள். மச்சான்மார், மாமாமார் மருமக்கள் என்று ஏகப்பட்டோர்... அதைவிட அயலில் உள்ளோர்... அவள் யாரிடமும் போவதில்லை தனது கணவன் சுவிஸில் என்ற அகம்பாவம் இல்லை... புருஷன் இல்லா விட்டால் பாக்கும் ஆண்கள், பெண்கள் எல்லாம் ஒரு சந்தேகக் கண்ணோடேயே பார்ப்பார்கள், ஏன் வீண் தொல்லைகள் என்று எந்தவித அலுவல்களையும் அவளே பார்த்துக் கொள்வாள் ..

நல்ல அழகிற்கேற்ற உடற்கட்டு, செம்மஞ்சள் நிறம், நீண்ட கேசம்... வயல் வெளியிற் பொன்னிறச் சந்திரன் எழுந்து வருவது போல் உருட்டி வைத்த குங்குமப் பொட்டு, அவள் சிவந்த நெத்தியில் அம்மன் தெய்வத்தை நினைவூட்டும்...., பின்னால் நடந்து செல்லும் போது அவளது நடை பெண்களை கூட திரும்பிப்பார்க்கச் சொல்லும்.

மிருதுவான கைகள்... அதில் தழுவும் ஒரு சில வளையல்கள் ? திருமணமானவள் என்பதற்கு அவளது குங்குமம் மட்டுமே சாட்சி , குழந்தை பெற்றவள் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படி அவளது தேகக்கட்டு செந்தழிர்த்த முகம்; விழி விஷேசத்திற்கு அவளது முகத்தில் விழித்து போக வேண்டுமென்பது அந்த ஊர் ஆண்களுக்கு ஒரு ஆசை...

இந்த ஏழு வருடத்தில் எத்தனையோ பேர் அவளது தனிமைக்கு உதவி செய்ய வந்தனர். அண்ணன் தம்பி என உறவாட வந்தனர். பிரியாவை சைக்கிளில் ஏற்றி ஸ்கூலுக்கு சேர்க்க வரும் . பிரியாவுக்கு மாமன் முறை கொண்டாடும் வாலிபர் எத்தனையோ பேர் .. பிரியாவின் பாடசாலை அவள் வீட்டிலிருந்து ஒரு இருநூறு மீற்றர் தொலைவில் தான் இருக்கிறது. இரண்டு முடக்குகள் திரும்பினால் தெருவுக்கு ஏறும். தெருவில் ஏறியதும் வடக்குப் பக்கம் திரும்பி நின்று பார்த்தாலே பாடசாலை தெரியும். பெரிய பாடசாலையில் அவளுக்கு சேர்க்க விருப்பம்தான். ஆனால் மூன்று, நான்கு கிலோ மீற்றர் கொண்டு போய் பிரியாவை காலையில் விட்டு, பின்பு கூட்டி வருவது பெரும் கஷ்டமாக இருந்தது. எனவே தான் அருகிலுள்ள சின்ன ஸ்கூல் என்றாலும் தான் கூட்டிச் சென்று கூட்டி வரலாம் என்று சேர்த்திருந்தாள் விக்கி...

பாஸ் எல்லாம் கிடைத்துவிட்டது. இனி கொழும்பு போக வேண்டும். மாமியாரிடம் விசயத்தைச் சொன்னாள். மாமியையும் கொழும்புவரைக்கும் தன்னோடு வரும்படி கேட்டாள். முதலில் சம்மதம் தெரிவித்த அவளது மாமா மாமியாரும் பின் யாரோ சொந்தக்காரர் கொழும்புபோகினம் அவர்களோடு போகும்படி நழுவிக்கொண்டனர்.

அடுத்தநாள் தனியாக பிரியாவுடன் ஒரு றவலிங் பாக்குடன் புறப்பட்டாள் விக்கி; றெயில்வே ஸ்ரேசன் - விமான நிலையம் - ஒருநாளில் கொழும்பு ..

அவளது கணவனின் தங்கை கலா வீடு வெள்ளவத்தையில் இருக்கிறது; ஏற்கனவே ஆயத்தம் செய்திருந்தபடி - விமான நிலையத்தில் கலாவும் அவளது கணவனும் காத்திருந்தனர் - ஒரு கிழமைதான் வெள்ளவத்தையில் அவளது சீவியம் - சுவிஸ் பயணமானார்கள் பிரியாவும் விக்கியும்; சுவிஸ் விமானநிலையத்தின் வாசலில் ஆனந்தன் காருடன் காத்திருந்தான்.

படத்தில் பார்த்துப் பார்த்து பிரியாவுக்கு அப்பாவைக் கண்டதும் உடனே அடையாளம் பிடித்துவிட்டாள். 'அம்மா . அப்பா ' என்று இழுத்தபடி விக்கியின் கையை இரண்டு கைகளாலும் பிடித்தபடி அவளது சேலைக்குள் தன்னை மறைத்து வெட்கப்படுவது போல் தகப்பனை விழித்துப் பார்த்தபடி ஒதுங்கி நின்றாள் பிரியா.

ஏழு வருடங்களின்பின் தன் கணவனைக் காணும் 'விக்கி' கண்கள் கலங்க மெதுவாக அவனை நோக்கி வந்தாள் - ஆனந்தன் மெல்லியதாகச்சிரித்தபடி அவளுடைய கையிலிருந்த றவலிங் பாக்கை வாங்கி காருக்குள் போட்டுவிட்டு முன்கதவை திறந்துவிட்டான். பிரியா அம்மாவின் சேலையை இழுத்துச் சுருக்கி தன்னைச் சுற்றி பயந்து பயந்து காருக்குள் ஏறாமல் கைகளை இழுத்தபடி நின்றாள் - 'என்ன பிரியா அப்பா அப்பா என்று

ஒரே அலட்டுவாய் இப்ப அப்பா வைக் கண்டதும் என்ன வெட்கம் - பெரிய மனிசிமாதிரி ஏறு... ஏறு..' என்று மெதுவாக கண்டிக்கும் பாவனை செய்தாள் விக்கி- பிரியா தாயைத் தொடர்ந்து காருக்குள் ஏறினாள் –

பயணக் களைப்பு, இரவு சரியாகச் சாப்பிடாமலே பிரியா தூங்கிவிட்டாள். பிரியாவை நித்திரையில் ஆனந்தன் மாறி மாறி கொஞ்சியதைப் பார்த்து தன்னுள் பூரித்துப்போனாள் விக்கி.

அந்த அன்னிய தேசத்திலும் தன் கணவன் அருகில் இருக்கும் தெம்பு அவளுக்கு ஒரு புது சுதந்திர உணர்வை கொடுத்தது. மனம் குதூகலத்தால் துள்ளிக் குதித்தது: உடல்களைப்பையும் மீறி இனம்புரியாத உணர்வினால் மனம் தவித்துக்கொண்டிருந்தது.

இதுவரை இப்படியான உணர்வுகளால் அவள் பீடிக்கப்படவேயில்லை. அயல்வீடுகளில் எத்தனையோ ஆண்கள் அவளுடன் நெருங்கிப்பழக முயற்சி செய்த போதெல்லாம் - அவளுக்கு அது வெல்லாம் சோதனையாகத் தெரியவில்லை. வெறுப்பாகத் தான் தெரிந்தது. ஆனந்தனில்லாத இந்த ஏழுவருட இடைவெளியில் ஒரு நாளாவது - ஒரு நிமிடமாவது வேறுவிதமான உணர்வுகளால் அவள் பீடிக்கப்பட்டதே இல்லை. அவனைப் பிரிந்திருக்கிறோம் என்ற வேதனையைத் தவிர எந்த உடல் தேவைகளும் அவளை அலைக்கழிக்கவில்லை. ஆனால் இன்று ஒரு விசித்திர உணர்வு அவளிடம் ஏன் இப்படி என்று அவளால் அவளுக்கே தெரியப்படுத்த முடியவில்லை.

விக்கிக்கும் ஆனந்தனுக்கும் இடையில் சம்பிரதாயப் பேச்சுக்கள் சில, அம்மா அப்பா... அயல்வீட்டார்.. என்று சில சமாச்சாரங்கள் பரிமாறிக் கொண்டன. எதுவும் மனதில் இல்லாமல் வாயளவில் முடிந்து போனது.

விக்கியைப் பொறுத்தவரை அடுத்தகணம் என்ன நடக்கப் போகிறதோ என்ற ஏக்கம் - நெஞ்சு பலமாக அடித்துக்கொள்வது அவளுக்கே கேட்பது போலிருந்தது. முகத்தில் வெருட்சியோடு அப்படியே கட்டிலில் சாய்ந்தாள். ஏழு வருடமாக அடங்கிப்போய், அவளுக்கு தன்னைக் காட்டிக்கொள்ளாத ஒரு புது உணர்வு இப்போது அவளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது.

ஆனந்தன் லைட் பட்டனை அமுக்கி வெளிச்சத்தை குறைத்து மெதுவாக விக்கியின் பக்கமாகத் திரும்பி அணைத்துக் கொண்டான்.

இதுவரை தன்னை நெருப்பாக வைத்திருந்தவள் குளிர்ந்து போனாள்:

ஒருமாதிரியாக அந்த இரவு அரைகுறையாக முடிந்து விடிந்து விட்டது.

ஆனந்தன் கொஞ்சம் தாமதமாக விழித்தான். ஏழுவருடத்திற்கு பின் தன் கணவனுக்கு ரீ போட்டுக்கொண்டு கட்டிலருகில் சென்று அவனை மெதுவாகத் தட்டினாள் விக்கி. ரீயை அருகிலுள்ள மேசையில் வைக்கும்படி கையால் சைகை காட்டி விட்டு முதுகை கட்டிலில் உரசியபடி நிமிர்ந்திருந்தான் ஆனந்தன்.

அவனது முகத்தில் புன்னகையில்லை. ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. விக்கி அருகில்போய் அமர்ந்து கொண்டாள். ஏழு வருடங்களின் இடைவெளியான நெருக்கம்.. அவனது மடியில் சாய்ந்தபடி 'என்ன ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்' என்று செல்லமாகக் கேட்டாள் விக்கி.

ஒன்றும் இல்லை.. சுவிஸில் ஒரே கதை'

---

தொழிற்

சங்கவாரி- அடேநில் நீ வேலைக்குத்தானே போ'கிறாய்?

ஊழியர்- இல்லை

சங்க வாரி- பின்ன எங்கே போகிறாய்?

ஊழியர்- வேலை நிறுத்தந்திற்கு.

— ப. தெய்வேந்திரன்

---

'என்ன ஒரே கதை'

'இல்லை இங்கு வந்திருக்கிற ஆம்பிளைகளின்ட மனிசிமார் எல்லாம் ஊரில ஒருமாதிரித்தான் நடக்கினமாம்'

வெடுக்கென எழுந்தாள் விக்கி 'என்ன சொல்கிறீர்கள்?

பக்கத்து தெருவில் ஒருவர் இருக்கிறார். ஆறுமாதம் தான் மனிசியை விட்டு இங்குவந்து. அவற்றமனிசி யாரோடையோ ஓடிட்டாளாம், பாவம் ' அவர் விசர்பிடிச்சமாதிரி தாடிவளர்த்துக் கொண்டு திரிகிறார்' கொழும்பில் லொச்சில வந்து நிற்கிற யாழ்ப்பாணத்து பொம்பிளைகளைப்பற்றி ஒரே அசிங்கமாக இங்கு கதைக்கிறார்கள். கேட்கவே அவமானமாக இருக்குது

'நானும் உன்னைவிட்டு வந்து ஏழு வருடமாகுது. இவ்வளவு இளமையோடு, அழகோடு, தனிமையில் எப்படி இருந்தனி? அதுதான் உன்னைக் கேட்க வேணும் எண்டு நினைச்சேன் -

' நீ ஒழிக்கத்தேவையில்லை. இது ஒரு பசி, தசை உணர்வுகள். தனிமனித உரிமை - இதற்காக வெட்கப்படத் தேவையில்லை.

பசிப்பவன் சாப்பிடுவதில் குற்றமில்லை. நீ ஒரு நண்பனைப் போல்—என்னிடம் சொல்லலாம். நான் மனித உணர்வுகளை மதிப்பவன் - உனக்கு அப்படிப்பட்ட உணர்வுகளால் .....'

'நீ இல்லை என்று சொன்னாலும் அது பொய்தான் - நிட்சயமாக நான் நம்பப்போவதில்லை- எந்த ஞானியாலும் முடியாது. ஒத்துக்கொண்டால் எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு ஏற்படும்-'

பாடமாக்கிக் கூறுவது போல் ஆனந்தன் படபடவென்று சொல்லி முடித்தான்.

எல்லா உணர்வுகளையும் ஒரு நொடியில் இழந்துபோனாள் விக்கி... மனித உரிமைகளை மதிக்கும் அந்தஅந்நிய மண்ணில் உணர்வுகளே செத்துப்போன பிணம்போல் உணர்ந்தாள்.

''யாழ்ப்பாணப் பெண்கள் கொழும்பில் சீரழிவது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது - எனக்குத் தெரிந்ததெல்லாம் - என் இரத்தத்தோடு ஊறிப்போன எங்களின் பாரம்பரியம்— அது எனக்குத் தெரியாமல் என்னுள் என்னை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சக்தி. நாம் அதை தெய்வீகமாக கருதுவதனால்தான் எம் மண்ணில் குடும்பங்கள் இன்னும் கோயில்களாக இருக்கின்றன. உங்கள் அளவுக்குமீறிய தனிமனித உணர்வுகளை - உரிமைகளை கணவன் மனைவி உறவுகளுக்கிடையிலும் செலுத்தி சீரழிந்துபோனீர்கள். சகிக்கமுடியாத இயற்கைக்கு மீறிய செயல்களினால் - மாற்ற முடியாத கொடிய நோய்களால் செத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் திருந்துவதாய் இல்லை. இப்படிப்பட்ட உணர்வுகளோடு ஒருகணநேர வாழ்வும் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது.''

அடக்கமுடியாமல் கண்ணீரும் வார்த்தைகளும் வெளியேறின.

☼ ☼ ☼

அடுத்த நாள் அவள் கொண்டுவந்த றவலிங்பாக்கை தோழில் சுமந்தபடி ஒருகையால் பிரியாவை அணைத்துக் கொண்டு சுவிஸ் விமான நிலையத்தில் இலங்கை நேர்க்கிப் பயணமாக இமிக்கிறேசன் வரிசையில் நின்று கொண்டிருந்தாள் விக்கி...

அவளது வேகத்தைத் தடுக்க முடியாமல், அவள் மறையும் வரை விமான நிலையத்தின் கண்ணாடியினூடாக தனியாக நின்று பார்த்துக்கொண்டு மட்டும் நின்றான் ஆனந்தன். ●

---

# மரணசாசனம்

கண்ணீர் வந்தால் கவிதை எழுது
காதல் வீழ்ந்தால் கடிதம் எழுது
தண்ணீர் குறைந்தால் கிணற்றைத் தோண்டு
தாயைப் பழித்தால் கன்னத்தைத் தீண்டு
பதவி கிடைத்தால் குறளைப் படி
பார்வை குறைந்தால் இறைவனைப் பிடி
உதவி நின்றால் வியர்வையைத் தெளி
உயிர் மீண்டால் உன்னையே படி

- நல்லை அமிழ்தன்

---

வாசகர் நெஞ்சம்

# மறு பிறவி

சுந்தர் மரிக்கவில்லை,
சிரித்திரனும் மறையவில்லை;
வந்து மறு பிறவி
எடுத்துள்ளான் ''சுந்தரனாய்''
கருத்தாழம், நகைச் சுவையில்
சற்றும் சளைத்தவன் அல்ல
சுந்தரன் என்பதனை மெய்ப்பித்து,
பல்லாண்டு காலம்
வாழ்க! வென வாழ்த்துகிறேன்.

ப. தெய்வேந்திரன்
7, பேக்கரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

சுந்தரன் பொது அறிவுப் போட்டி - 1க்கான விடைகளைப் பல நேயர்கள் எழுதியிருந்தனர். அதற்குள் சரியாகவும் தெளிவாகவும் எழுதிய மூன்று நேயருக்குப் பரிசு பங்கிடப்படுகிறது. அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.



**அருந்ததி கனகரட்ணம்**
ஆண்டு 10
சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை
மானிப்பாய்.

**கரவை தனு**
சாய் இல்லம்,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

**சோ. சபாபதி**
சிவன் கோவில்,
மயிலணி,
சுன்னாகம்.

பாராட்டுப்பெறும் நேயர்

**நித்யா இராமகிருஷ்ணன்**
ஆண்டு 5
இருதய கல்லூரி
கரவெட்டி.

## சுந்தரன் பொது அறிவுப் போட்டி - 1
## விடைகள்

1. சி. சிவஞானசுந்தரம்
2. 74829
3. பிரான்ஸ்
4. கிளவு
5. மேற்குலக நாடுகளைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட கடலோடி.
6. பாத்பைன்டர்.
7. வந்ன்
8. யாழ். பல்கலைக்கழகம்
9. தென்மராட்சி - மீசாலை
10. அமெரிக்கப் பாராளுமன்றம்



மணமகன்– பொண்ணு என்ன இவ்வளவு நகை பூட்டியிருக்கா ?

புரோக்கர்– நீங்கதானே... பொண்ணு தங்கச்சிலையாட்டம் இருக்கணும் என்று கேட்டீங்கள்!

- ரவி - நல்லூர்

### வாசகர் மடலோலை

சுந்தரன் எனும் நாமம்பூண்டு, நகைச்சுவையின் தனித்துவத்துக்கு மகுடம் சூட்டிச் சிறந்த நல்ல சிறுகதைகள், சிரிகதைகள், ஜோக்குகள், பொது அறிவுகள் அம்சங்கள் தாங்கி இதயங்களுக்கு இதமளித்த சுந்தரனே! உனது கன்னி இதழே எனைக் காந்தம் இரும்பைக் கவர்தல் போல் ஈர்த்துள்ளது.

சிரித்திரனின் இடத்தைநிரப்ப வந்த சுந்தரனே உனை நீடூழி வாழ வாழ்த்தி விடைபெறும் சுந்தரன் வாசகன்.

நாகமணி மகேந்திரலிங்கம்
பழனி, டச்சு வீதி,
கோப்பாய்.

# தட்டுங்கள்....
# திறக்கப்படும் ?!



அருணன் - யாழ்ப்பாணம்.

? மதங்களால் மக்களுக்கு நன்மையுண்டா?

☼ நிச்சயமாக; பல்லாயிரம் படுகொலைகளால் பூமிபாரம் குறைகிறதே!

● ? போர்க்கருவிகளைவிட எழுத்தாளனின் பேனா வலிமையுடையது என்பது வெறும் கோமாளித்தனமானது; உமது கருத்து?

☼ பல்லாயிரம் மக்கள் பட்டினியால் செத்து மடிய, பலகோடி ரூபாக்களை அதே மனிதரைக் கொன்று குவிக்கும் ஆயுதங்களில் செலவு செய்து கொண்டு மனிதநேயம் பற்றிப் பேசி, சட்டங்களும் இயற்றுவது கொடுமையான கோமாளித்தனம். தீனிபோகும் திசையெல்லாம் தன் பேனாவை திருப்பித் திருப்பிப் பிடிப்பவன் 'பேனாவின் வலிமை' பற்றிப் பேசுவது கோமாளித்தனம். பேனா பிடிக்கும் விரல்கள் ஆயுதங்களால் நறுக்கப்படலாம், அதிலிருந்து எழுந்த எழுத்துக்களை - உலக மனங்களில் ஊறிவிட்ட கருத்துக்களைச் சுட்டுக் கொல்ல இன்னும் எந்த ஆயுதமும் தோன்றவில்லை.

வி. செல்வநாயகம்,
126/4, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

? யேசுநாதர் இரண்டாயிரம் ஆண்டளவில் தோன்றுவார் என்ற கருத்து ஒன்று பரவலாகவுள்ளதே, இது சாத்தியமானதா?

☼ நிச்சமாக பல யேசுநாதர் தோன்றுவார்கள் என்றுதான் நம்புகிறேன். ஏனெனில் பல யூதாஸ்கள் ஏற்கனவே தோன்றி ஆயத்த நிலையில் காத்திருக்கிறார்களே!

---

● ? தட்டுங்கள் திறக்கப்படும் பகுதியில் பரிசினைப்பெறும் கேள்வி

நா. மகேந்திரலிங்கம் பழனி,
தென் கோப்பாய்.

? சிரிக்கத் தெரிந்த மனிதனுக்கு சிந்திக்கத் தெரியவில்லையே ஏன்?

☼ சிந்திக்கத் தெரிந்தாலே மனிதன் சிந்தனை வளமாகிவிடும்-
சிரிக்கவைக்க உதவாத சிந்தனையால் மனிதன் இயந்திரமாக பரிமாணம் பெற்றுக் கொண்டிருக்கிறான்.

இராமஜெயபாலன்,
கல்லூரி வீதி, கொக்குவில்.

? திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப் படுகின்றன என்றால் காதல்கள் எங்கே நிச்சயிக்கப்படுகின்றன?

☼ சொர்க்கத்தின் நுளைவாயிலில்:, வென்றால் உள்ளே போகலாம் திருமணம் நிச்சயிப்பதற்காக. தோற்றுவிட்டால் வெளியே வந்துவிடவேண்டியதுதான். தப்பி விடலாம்!

க. பகீதரன்
இல. 7, சென்மேரீஸ் 2ம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

? மனிதர்கள் மனிதர்களாகவே இல்லை என்கிறார்களே உண்மையான மனிதர்கள் எப்படி இருக்க வேண்டும்?


☼ இயற்கையாக இருக்க வேண்டும்.

---

? கடவுள் எப்போது ஓசைப்படுகிறார்?

☼ உண்டியல் கிலுங்கும்போது

மகுடி - சிரித்திரன்



# ஒலிம்பிக்ஸ்

புராதன கிரீஸ் உலக விளையாட்டரங்கிற்கு வழங்கிய உன்னதமான பரிசுதான் ''ஒலிம்பிக்ஸ்''. அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கும் ஒரு சகோதரத்துவ விழா, நண்பரும் பகைவரும் ஒன்றாகக் கைகோர்த்து நிற்கும் ஒலிம்பிக்ஸில் வெற்றி பெறுவதை விட பங்கு பெறுவதே பிரதானமானது. கிறிஸ்து பிறப்பிற்கு 776 வருடங்களுக்கு முன் ''ஆல்தேய்'' நதிக்கரையில் அரங்கேறிய ஒலிம்பிக்ஸில் இருந்துதான் தகவல்கள் கிடைக்கின்றன.

கிரீஸின் மேற்கு பிலொப்பனேஷியாவில் உள்ள புராதன புண்ணிய நகரங்களில் ஒன்றுதான் ''ஒலிம்பியா''. முதன் முதலில் ''ஸ்ட்ரேடியன்'' எனும் ஒரு இனமே ஒலிம்ப்பிக்ஸில் பங்கேற்றது. கி.மு. 728 வரை (அதாவது 13 ஆம் ஒலிம்பிக்ஸ் வரை) போட்டிகள் ஒரு தினத்தில் முடிந்து விட்டன. 14 ஆம் ஒலிம்பிக்ஸில் அரை மைல் ஓட்டமும், 15 ஆம் ஒலிம்பிக்ஸில் இரண்டரை மைல் ஓட்டமும் துவங்கியது. 18 ஆம் ஒலிம்பிக்ஸில் ஐந்து இனங்களை உட்படுத்திய ''பெண்டாத்லானும்'' சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பாக்சிங் 23 ஆம் ஒலிம்பிக்ஸ் முதல் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 25 ஆம் ஒலிம்பிக்ஸில் ''இக்வஸ்டேரியன்'' (குதிரையேற்றம் போன்றவை) உட்படுத்தப்பட்டது. ''ட்ராக் அன்ட் பீல்டு'' இனங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டது. 33 ஆம் ஒலிம்பிக்ஸிலிருந்துதான் ஷாட்புட்களைப் போன்று கல்லெறிதல் மற்றும் டிஸ்கஸ்த்ரோ போன்றவையும் புராதன ஒலிம்பிக்ஸில் இடம் பெற்றிருந்தன.

குத்துச் சண்டையும், மல் யுத்தமும் இணைந்த ''பான்க்ரேஷன்'' எனும் ஒரு இனமும் புராதன ஒலிம்பிக்ஸில் இடம் பெற்றிருந்தது. கி.பி. 576இலிருந்து ஒலிம்பிக்ஸின் புகழ் உலகமெங்கும் பரவியது. கிரீஸ் நாட்டவரோடு வேற்று நாட்டினரும் போட்டிகளில் பங்கேற்றனர். வரலாற்றாசிரியரான ஹிரோடோட்டசும், தத்துவஞானியான சாக்ரட்டீசும், கிரீக் கவிஞர் வின்டாரும், மாவீரன் அலெக்சாண்டரும் புராதன ஒலிம்பிக்ஸின் முக்கிய பார்வையாளர்கள்.

ஒலிம்பிக்ஸை மறுபடியும் ஆரம்பிப்பதற்காக கிரேக்கர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாழாயின. முடிவில் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த குபெர்தியின் பெரும் முயற்சியால் ஒலிம்பிக்ஸ் மறுபடியும் துவங்கியது.

புதிய ஒலிம்பிக்ஸ் 1896 ஏப்ரல் 6 ஆம் திகதி திங்கட் கிழமை, கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் துவங்கியது.

''சியுஸ்'' தெய்வத்தின் முன் சத்தியப் பிரமாணம் செய்த பிறகே போட்டிகளில் பங்கேற்றனர். விளையாட்டு வீரர்கள் மட்டுமல்லாது பயிற்சியாளர்களும், உறவினரும் கூட சத்தியப் பிரமாணம் எடுக்கவேண்டும். ஆலிவ் இலைகளால் உருவாக்கப்பட்ட கிரீடமே பரிசாக இருந்தது. புராதன ஒலிம்பிக்ஸில் பெண்கள் பங்குபெற அனுமதிக்கப் படவில்லை.

நீரோ சக்கரவர்த்தியின் முட்டாள்தனமான விதிமுறைகளுடன், ஒலிம்பிக்ஸ் எத்தியோல் மகாராஜா காலம் வரை தொடர்ந்தது. ஆனால் கி.பி. 394 இல் ரோமை ஆண்ட தியோடோஷயஸ் ஒலிம்பிக்ஸை தடை செய்தார். கி.பி. 393 இல் நடைபெற்ற 293 ஆம் போட்டியுடன், புராதன ஒலிம்பிக்ஸின் சரித்திரம் நிறைவுற்றது.

இதில் 13 நாடுகளைச் சேர்ந்த 311 விளையாட்டு வீரர்கள் பங்கு பெற்றனர்.

முதல் இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து, புதிய ஒலிம்பிக்ஸ் மூன்று முறை தடைப்பட்டது. பலமுறை நாடுகள் பலவும் இதைப் புறக்கணித்தன.

**சின்னம்:** அனைத்து மக்களின் விளையாட்டு நட்புறவைக் குறிக்கும் வகையில் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்கள். இந்த வளையங்கள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா எனும் ஐந்து கண்டங்களையும் குறித்து நிற்கின்றது. ஒவ்வொரு வளையமும் வெவ்வேறு வண்ணமுடையவை. நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை மற்றும் சிகப்பு.

கொ்டி: வெள்ளைப் பின்னணியில் அமைந்த ஐந்து வளையங்கள்.

குறிக்கோள்: ''சிடியுஸ், அல்டியுஸ், போர்டியிஸ்'' எனும் கிரேக்க வார்த்தைகளின் பொருளான வேகம், உயரம், துணிச்சல். தற்காலப் பொருள் ''பறத்தல், உயரம், வலிமை,'' இக் குறிக்கோள் வார்த்தைகள், பிரெஞ்சு கல்வியாளரான ஃபாதர் டைடோன் என்பவரால் 1895 இல் உருவாக்கப்பட்டது.

கோட்பாடு: ஒலிம்பிக்ஸில் முக்கியமானது பங்கு பெறுவது தானே தவிர வெற்றியடைவதன்று. முக்கிய அம்சம் நல்ல விதமாகப் போராடுவதுதான்.

சத்தியப்பிரமாணம்: ஒலிம்பிக்ஸை நடத்தும் நாட்டைச் சார்ந்த ஒரு அதெலெட்டிக் கீழே குறிப்பிடுவதை, துவக்க நாளன்று படிப்பார்: ''ஒலிம்பிக் விளையாட்டுக்களின் சட்ட திட்டங்களை மதிப்பதற்காகவும் விளையாட்டின் மேன்மைக்கும், அணியின் சிறப்புக்காகவும் உண்மையான விளையாட்டுணர்வுடன் செயற்படுவதற்காக நாங்கள் இந்த ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்கிறோம் என்பதை, அனைத்து விளையாட்டாளர்களின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

' In the name of all competitors, I promise that wewill take part in these Olympic Games, respecting and abiding by the rules which govern them, in the true spirit of sportsmanship for the glory of sport and the honour of our teams''.

சத்தியப் பிரமாணமும், கோட்பாடும் நவீன விளையாட்டுகளின் கண்டுபிடிப்பாளரான பியர்ரே டி கௌபெர்டின் என்பவரால் அமைக்கப்பட்டது.

ஒலிம்பிக் தீபம்: பழங்கால விளையாட்டிற்கும், தற்கால விளையாட்டிற்கும் இடையேயான தொடர்பை உணர்த்துகின்றது. ஜோதி குறித்த நவீன விளக்கம் 1936 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒலிம்பிக் ஜோதியை உருவாக்கும் தீப்பந்தம் கிரீஸில் உள்ள ஒலிம்பியாவில் சூரியக் கிரணங்களால் பற்றவைக்கப்பட்டு ஒலிம்பிக்ஸ் நடைபெறும் நாட்டிற்கு பல தொடர் ஓட்டக்காரர்களால் கொண்டு வரப்படுகின்றது. தேவை ஏற்படின்கப்பல்களும், ஆகாய விமானங்களும் இதற்குப் பயன்படுத்தப்படும்.

'' ஒலிம்பிக் விளையாட்டுகளின் சட்டதிட்டங்களை மதிப்பதாகவும், விளையாட்டின் மேன்மைக்கும், அணியின் சிறப்புக்காகவும் உண்மையான விளையாட்டுணர்வுடன் செயல்படுவதற்காக இந்த ஒலிம்பிக்ஸ்களில் நாங்கள் கலந்து கொள்கிறோம் என்பதை அனைத்து விளையாட்டாளர்களின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.''

''In the name of Competitors, I promise that we will take part in these Olympic games, respecting and abiding by the rules which govern them, in the true spirit of sportsmanship for the glory of sport and the honour of our teams.''

சத்தியப்பிரமாணமும், கோட்பாடும் நவீன விளையாட்டுக்களின் கண்டுபிடிப்பாளரான பியர்ரே டிகௌபெர்சன் என்பவரால் அமைக்கப்பட்டது. ஒலிம்பிக்கின் தீபம் பழங்கால விளையாட்டிற்கும், தற்கால விளையாட்டிற்கும் இடையேயான தொடர்பை உணர்த்துகின்றது. ஜோதி குறித்த நவீன விளக்கம் 1936ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

# ஏ. கே. 47

தூக்க எளிதாய் துடிக்கின்ற வேகத்தில்
சாக்காட்டைத் தூவுகிற சாதனமே – பேக்காய்நீ
காலன் எருமை கடுகதியாய் உன் வடிவில்
கோலம் எடுத்ததோ கூறு.

காந்திய வாதிகளின் கைத்தடிகள் உக்கிவீழ
தோன்றியநீ சாத்தான்செங் கோலென்பேன்
- வீண்வார்த்தை
பேசாது தீர்ப்பைத் திணித்துவிடும் நீமாந்தர்
காசுக்குத் தூக்குக் கயிறு.

புத்தனுக்கும் பாபர் அயோத்தி ராமனுக்கும்
இத்தரையில் ஏதுதுணை உன்னைவிட - பக்தாத்தில்
அல்லாவும் உன்னைநம்பி ஆதிகர்த்தர் இஸ்ரேலில்
நில்லார்; நீஇன்றி நிஜம்.

உயிர்கடையும் மத்தே; உடலை உழுமேரே
பயிராகும் ஊழிக் கரும்-பே! - கயிறைவிட்டு
காலன் எடுத்த கனையே; நாசத்தின்
தோழா தொழிலைத் துவக்கு.

— முகுந்நன்

# கந்தசாமிக்குப் புறமோஷன்

சிரிகதை ஒன்றிற்கான போட்டிக்கு சிறந்த பல சிரிகதைகள் கிடைக்கப்பெற்றன. பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

நடுவர்களால் பரிசிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிரிகதையினை தங்களுக்குத் தருகின்றோம்

இதனை எழுதிய சு சிவராசாவிற்கு எமது நன்றிகள்.

இராமநாதன் சுமார் நாற்பது வயதுடைய ஒரு கிளறிக்கல் சேவன். இதுவரையில் உருப்படியாக ஒரு பதவிஉயர்வுகூட அவர் பெறவில்லை.

''ஐயாவும் நானும் இந்த அலுவலகத்தின் கற்புக்கரசன்கள்'' என்று பியோன் கந்தசாமி சொல்லும் போதெல்லாம் இராமநாதனின் முகத்தில் அசடு வழியும். வேறு பதவிகளை ஏறெடுத்தும்பார்க்காத திண்மையான கற்புடையவர்கள் அவர்கள்.

அது ஒரு கிராமசபை அலுவலகம், பெரிய அளவில் வேலைகள் கிடையாது. கிராமத்தில் உள்ள சந்தையில் வரி வசூலிப்பது, சயிக்கில்காரர்களிடம் பாதுகாப்புக் காசு வாங்குவது, மாதா மாதம் கடைக்காரர்களிடம் வரி வாங்குவது என்பனவே முக்கியமான கடமைகள். கிராம அபிவிருத்திக்காக ஏதாவது . சீ... நாட்டு நிலைமை சரியில்லை.

இராமநாதன் வேலைகளில் மிக ஒழுங்கு. வேலையே நடைபெறாத அலுவலகத்துக்கு எட்டு மணிக்கு முன்பே ஆஜராகிவிடுவார். சரியாக நாலுமணிக்குப் பிறகுதான் கதிரையைவிட்டு எழுந்திருப்பார். இராமநாதனுக்கும் மனுசிக்கும் ஒத்துவராது, அதுதான் மனுசன் கொஞ்சம் நிம்மதியாக இருந்திட்டுப் போகுதாக்கும் என்பது அவரது சின்சியாறிற்றிக்குக் கிடைத்த சான்றிதழ்.

அன்றும் எட்டுமணிக்கு இராமநாதன் வந்துவிட்டார். அலுவலகம் திறக்கப்படவில்லை. கந்தசாமியையும் காணவில்லை. அந்தக் காலை வேளையிலேயே அவருக்கு மத்தியான வெய்யிலில் நிற்பதுபோலச் சூடு ஏறிக் கொண்டிருந்தது.

அலுவலகத் திறப்பு சீ சீ. (தலைமைக் கிளார்க்) வீட்டில் இருக்கும். கந்தசாமி அங்கே போய் எடுத்துக்கொண்டு வர வேண்டும். அலுவலகத்தைத் திறந்து முதல்வேலையாக இராமநாதனின் மேசையைத் துடைத்துத் தட்டி பைல்களை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான். இப்போது எட்டுப் பதினைந்து ஆகியும் கந்தசாமி வரவில்லை.

பொறுமை இழந்து ரென்சன் ஆகி அங்குமிங்குமாக உலாத்தத் தொடங்கினார். திடீரென்று ஏதோ ஒன்றுடன் மோதிக் கொண்டார். 'டாம்இற்' என்று இரண்டுஆங்கில வார்த்தைகளை கடித்துத் துப்பினார். சிலர் கோபம் வந்தால் தீண்டத்தகாத வார்த்தைகளைக் கொட்டுவர்.

கந்தசாமிதான் ஓட்டமும் நடையுமாக வந்து அவரோடு மோதிக் கொண்டான். அவனுடைய பதினைந்து வருட சேர்விசில் இராமநாதன் அப்படி இங்கிலீசில் திட்டியதைக் கேட்டதே இல்லை. அவனுடைய சப்தநாடிகளும் ஒடுங்கிப்போய் விட்டன. இராமநாதன் அவனை விடக் கொஞ்சம் குள்ளமானவர். அவருடைய நெற்றி சரியாக இவனுடைய நாடியை இடித்து விட்டிருந்தது.

''சீ.சீ ஐயா வீட்டிலை கொஞ்சம் பிரச்சனையாப்போச்சு. வழியிலை சயிக்கிளும் காத்துப் போட்டுது. அதுதான்...''

அடிபட்ட வலியை மறந்து கந்தசாமி அபிநயம் பிடித்தான். இராமநாதன் கொங்கணவன் பார்வை பார்த்தார்.

அந்தப் பார்வையை எதிர்கொள்ளத் திராணிஅற்று தலை குனிந்தபடி விரைந்து சென்று கதவைத்திறந்தான் கந்தசாமி.

ஒரே விநாடியில் இராமநாதனின் மேசை தயாரானது. அவர் வேகமாகவந்து தமது மேசையில் அமர்ந்தார். மேசையில் இருந்த ஒரு பைலை எடுத்துத் தொப்பென்று போட்டார் கந்தசாமியிடமிருந்து எந்த றியாக்சனும் இல்லை.

''மேசையெல்லாம் ஒரே தூசு, அவசர வேலை எல்லாம் இப்பிடித்தான்.''

கதிரையிலிருந்து எழுந்தார். கதிரையை வேகமாக மேசையோடு சேர்த்து அறைந்தார். அற்றன்டன்ஸ்புக் இருக்கும் சீ.சீயின் மேசைக்கு நடந்தார். கந்தசாமி தனக்குள் முணுமுணுத்தான்.

''இவையளுக்கு ஏறிமிரிக்க நான்தான் வாய்ச்சன், வீடுகளிலை பெண்சர்திமாருக்குச் சல்யூட் அடிக்கிறவை. காத்தாலை சீ சீ. வீட்டைப் பாத்தனே, அந்த வெக்கக்கேட்டை''

கந்தசாமியின் முணுமுணுப்பு இராமநாதனின் காதில் சரியாக விளவில்லை. மீண்டும் அதே கொங்கணவன் பார்வையால் எச்சரித்துவிட்டு சீ.சீ.யின் மேசையை அடைந்தார். அற்றன்டன்ஸ் புக்கைப் புரட்டிய போது, அவரது கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. மூன்று கையொப்பங்கள் அவரைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தன. நேரம் 8.20 என்று போடப்பட்டிருந்தது. இது அநியாயம் என்றபடிநிமிர்ந்தார். பாலாவும் சண்முகமும் அவருக்கு முன்னால் சிரித்தபடி நின்றனர். இண்டைக்கு எங்கடை வேலை எப்படி என்று அவரைக் கேட்பது போல இருந்தது.

எல்லாத்துக்கும் சீ.சீ. வரட்டுக்கும் என்று இரைந்தபடி மீண்டும் தமது மேசைக்கு வந்தார். ஒரு பயிலை எடுத்து முன்போலவே மேசையில் போட்டார். பிறகு அதைத் திறத்து ஏதோ அக்கறையாகப்படிப்பவர்போல பாவனை செய்தார்.

பாலாவும் சண்முகமும் பணவசூல் செய்பவர்கள். றிசீற் புத்தகங்களை இராமநாதன் அவர்களுக்கு கொடுத்து அனுப்ப வேண்டும் அவர்கள் முன்னால் நிற்பதை அறியாதவர் போல ஒற்றைகளைப் புரட்டினார் இராமநாதன். பாலாவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

''பெரிய கவுண்மென்ற் ஏஜன்ற், ஒரே பயிலைத்தானே ஒவ்வொரு நாளும் புரட்டுகிறீர். றிசீட் புத்தகத்தைத் தந்துட்டுப் புரட்டுமன்.''

''நாங்கள் போனாப் பிறகு ஐயா பயிலை மூடிவிடுவார்'' என்று சண்முகம் ஒருவரி சேர்த்து விட்டான்.

சண்முகமும் பாலாவும் சிரிக்க கந்தசாமியும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அப்போது கையில் பிறீவ்கேசுடன் சீ.சீ உள்ளே வந்தார். சிரிப்பு சட்டென்று நின்றது. அவர் தமது பார்வையைக் கந்தசாமி மீது ஏவினார். தமது நெற்றியில் ஒட்டியிருந்த பிளாஸ்ற்றரையும் தடவிக்கொண்டார்.

அவர் மனைவியிடம் காலையில் அடிபட்ட விசயம் கந்தசாமிக்கு மட்டுமே தெரியும். தமது மானம் போய்விட்டதாக நினைத்தார். சீ.சீ.யைக் கண்டதும் றிசீட்புத்தகத்தை எடுத்து இராமநாதன் மேசையில் போட்டார். ''இனிமேல் ரைமுக்கு வரவேணும்'' என்றபடி புத்தகங்களைத் தள்ளினார்;

பாலா புத்தகங்களை எடுத்தான். சண்முகம் சீ. சீ. யைப் பார்த்தான். மணப்பெண்போல அவர் தலைகுனிந்தபடி இருந்தார். இருவரும் வெளியே போனார்கள். கந்தசாமியைக் கூப்பிட்டு சீ.சீ. சொன்னார்:

''திறப்பை இனிமேல் நீயே வைத்துக்கொள்; அதுதான் நல்லது.''

தனக்கு ஒரு புறமோசன் கிடைத்த பெருமையோடு கந்தசாமி இராமநாதனைப் பார்த்தான். இப்போது அவரும் தலை குனிந்தபடி இருந்தார். நேற்று இரவு அவரும் தமது மனைவியிடம் வாங்கிக்கட்டியிருந்தார். அடுத்துவரும் மணித்தியாலங்களுக்கு இந்த இருவருக்குமே நிறைய வேலை இருக்கிறது.

சு. சிவராசா
கேரதீவு வீதி,
நாவற்குழி கிழக்கு,
கைதடி.

## வாசகர் இதயம்

ஆசிரியர்.
'சுந்தரன்'
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

சுந்தரன் கண்டேன். மனம் நிறைந்தது.

மனமுற்றம் மூலம் எளிய நடையும், திறமையானவர்களைப் பாராட்டும் பாங்கும்கண்டு அகமகிழ்ந்தேன்.

இன்னும் சிறப்பாக சிறுகதைகள் வெளிவரவேண்டும். கவிதைகள் சுமாராக இருந்தன. துணுக்குகள், செய்திகள் அதிகமாகிவிட்டன என கருதுகிறேன். பிரதிகள் நன்கு ஒப்புநோக்கிப் பிரசுரிக்க வேண்டும். ஆரோக்கியமான மாற்றங்களுடன் சுந்தரன் வெளிவர நிறைவான வாழ்த்துக்கள்.

2, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்

அன்புடன்
இரா. செல்வவடிவேல்

# விருட்ஷம்

- விஸ்வபாரதி

'ஓ! நண்பனே, எப்படி நலமாயிருக்கிறாயா?'

புதிய, இனிய குரல் வருகிறது. யாரையும் காணோமே எனச் சுற்றிச்சுற்றிப் பார்த்தான் இனியன். எனினும் எவருமே கண்ணிற் படவில்லை.

'நான்தான் மரம். உனக்கு நிழல் தந்து கொண்டிருக்கின்றேனே! அந்த மரம்!'

இனியனின் முகம் மலர்ந்தது. கண்கள் விரிந்தன. காதுகள் கூர்மை பெற்றன.

'நல்லது, நன்றி' இனியன் கூறினான்.

மரம் ஒரு தடவை சிலிர்த்துக் கொண்டது. கிளைகளும், இலைகளும் இயக்கம் பெற்றன. புதிய ஓசை கலந்த புதிய காற்றை எங்கும் பரவ விட்டுவிட்டு நின்றது மரம்.

''உனக்கு ஒரு விடயம் சொல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். சொல்லட்டுமா?''


''நல்லது! சொல்! ஆவலாயிருக்கிறேன்'' இனியன் சொன்னான்.

'நான் மனிதனுக்கு நிழல் தரவும், உங்களுக்காக மண்ணைச் செழிப்பாக்கவும் கடமைப்பட்டுள்ளேன். என்னிடமுள்ள பழங்களைப் பறவைகளுக்காகவும் கிளைகளை அவை கூடு கட்டி வாழ்வதற்கும் வைத்திருக்கின்றேன். இலைகளில் ஒரு பகுதியை மிருகங்களுக்காகவும் வைத்திருக்கிறேன். ஆனால் நீயோ எல்லாவற்றையும் உனதாக்குகின்றாயே. இது நியாயமா?'

இனியனின் இதயம் கனத்தது. மூளையில் புதிய அதிர்வுகள்; முகத்தில் வெட்கமும் அதிர்ச்சியும் கலந்த மாறுதல்கள். இனியன் கேட்டான்:

''நாங்கள் எல்லாவற்றையும் எடுத்துவிடாதவாறு பழங்களை நச்சுத்தன்மையுடையதாக்கி இருக்கலாமே. நாம் தவிர்த்திருப்போமே!''

'இங்கேதான் நண்பா நீ தவறு செய்கிறாய். நீ சிந்திப்பவன், பண்பட்டவன்; உன்னை அச்சுறுத்தியா நன்மைகளைச்செய்யப்பணிப்பது? எவருக்கும் எப்போதும் பயன் படக்கூடியதையே என்னால் தரமுடியும். நீதான் ஏனைய பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும். உனக்குத் தெரியுமா காகமும் செண்பகமும் உயிர் வாழ்வதால் உன் சூழல் சுத்தமடைகிறதே! அவற்றுக்கு உணவளிப்பதன் மூலம் உனக்குத்தானே நன்மை செய்கிறேன்!'



டாக்டர்: நான் தந்த மருந்துக்கு வயித்துவலி இடுப்புவலி - முதுகுவலி எல்லாம் குறைஞ்சிருக்கே?

நோயாளி: கண்பார்வை கொஞ்சம் குறைஞ்சிருக்கு

ப. தெய்வேந்திரம்

---

இனியன் அமைதியானான். மரம் எத்துணை தூரம் தெளிவுடன் பணியாற்றுகிறது எனத் தனக்குள் சிந்தித்தான்.

மரம் மீண்டும் ஒரு தடவை சிலிர்த்தது; மீண்டும் அதே புத்தோசையுடன் பரவியது— காற்று.

இனியன் மகிழ்ச்சியடைந்தான்.

''நண்பா! இன்னொன்று சொல்லட்டுமா! எனக்கும் நான் நின்று நிலைக்கும் " இந்த மண்ணுக்கும் உள்ள தொடர்பு பற்றித்தான்!''

இனியன் நிமிர்ந்து மரத்தைப் பார்த்தான். சொல்! நன்றாகச் சொல்! நீ இப்போது ஒரு கல்விக் கூடமாக, நல்ல ஆசானாகத் தோன்று கிறாய்! உன் முன் நான் மாணவன்தான் இப் போது!

மரம் தன்னை ஒரு தடவை நிதானித்துக் கொண்டது. மனிதனின் மாற்றம் கண்டு மனம் மகிழ்ந்தது. இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் பண்புதானே மனிதனுக்கு தலைமைத்துவ தகைமையை வழங்கியதோ எனச் சிந்தித்து விட்டுப் பேசலாயிற்று.

'' நான் இந்த மண்ணில்தான் நிற்கிறேன். விதையாக அதனுள் இருந்தேன். சிறு செடியாக இம் மண்ணின் செழிப்பு உதவிற்று. இப்போது பலரும் பார்த்துப் பெருமைப்படவும் பலரும் பலவிதபயன்களையும் பெறவும்கூடியமிகப்பெரிய விருட்சமாக வளர்ந்து உயர்ந்து நிற்கிறேன். என் காலடியில் எத்தனை ஆயிரம் புற் செடிகள் நிற்கின்றன. இத்தனை வளர்ச்சிக்கும் அடிப் படை ஆதாரம் இந்த மண்தானே, அதன் செழிப்புத்தன்மைதானே!

'' ஆம்; இதிலென்ன சந்தேகம்!

என்னைப்பார்! என்னை நிமிர்ந்து நிற்கச் செய்த இந்த மண்ணின் செழிப்பு சொற்பம் என்பதால் வேறு ஒரு சேற்று மண்தேடி என் ஆணி வேர்களைப் புதைத்துக் கொண்டேனா? சொல் ..!

'' இந்த மண் என்னை வளர்த்ததற்காக நான் மீண்டும் இந்த மண்ணைச் செழிப்பாக்கு கின்றேன். எனது இலைகளை இதே மண்மீது உதிர்க்கின்றேன். இலைகள் காய்ந்து சருகாகி மண்ணுக்கு உரமாகின்றன. என்னை வளர்த் தெடுத்த இந்த மண்ணை வளம் படுத்துவது என்கடமை என்பதை நான் உணர்ந்து செயற் படத்தொடங்கி நீண்டகாலமாகிவிட்டது ''.

'' ஓ! இது மிகப்பெரிய உண்மை. எனக்குப் புரிகிறது. நீ என்ன சொல்ல விளைகிறாயென்று எனக்குத் தெரிகிறது '' இனியன் சிந்தனை படர்ந்த முகத்தோடு பதிலிறுத்தான்.

'நண்பா! நான் உதிர்க்கும் இலைகளை நீ பல சமயங்களில் வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தி விடுகிறாயே. இது நியாயமா! என் கடமையை நான் செய்ய நீ அனுமதிக்க வேண்டு மல்லவா?'

'விருட்சமே! நீ கூறுவது உண்மைதான். ஆனால் உனது இலைகளை அப்புறப்படுத்தி னாலும் மீண்டும் வேறொரு நிலத்தில் தானே புதைக்கிறார்கள். அங்கும் செழிப்பு ஏற்படும் தானே!'

'' இல்லை! இல்லை! நீ தடுமாறுகிறாய்! என்னை வளர்த்த இந்த மண்ணைத் தொடர்ந்து செழிப்பாக்கினால்தான் எனக்குப் பின் இங்கே என் பணியைத்தொடர பல விருட்சங்கள் தோன்றும். இம் மண் பாலை நிலமாகிவிடாது.''

இனியனின் இதயத்தில் புதிய அதிர்வுகள், புதிய விழிப்புணர்வு மெதுவாக, நிதானமாகக் கூறினான்;

'உண்மைதான், நீ புதிய விழிப்புணர்வைத் தந்திருக்கின்றாய். அறிவு பூர்வமான விடயத்தை இதய வழி உந்தித்தள்ளியிருக்கின்றாய், நன்றி! மிக்க நன்றி! அப்புறப்படுத்தியவற்றை, உன் காலடி மண்ணிலிருந்து இடம் பெயர்ந்ததை மீண்டும் கொண்டுவரச் சொல்கிறாயா?'

' இது உனது பிரச்சினையல்ல! உனது தலைமுறைப்பிரச்சினையாகி விட்டது. உனக்குப் பின்னும் நீண்ட காலத்துக்கு இம் மண்ணில் புதிய விருட்சங்கள் தோன்ற வேண்டுமே! புதிய பசுமைக்கோலங்கள் வளர வேண்டுமே!

முடியுமானால் அதோதெரிகின்றபுதிய மரங் களுக்கு உதவு. அதை விடவும் அதோ தெரிகின்ற புதிய செடிகளுக்காவது துணை போ! அது எனக்கும் மகிழ்ச்சி தரும். உனக்கும் நன்மைதரும்! அழகான வண்ணத்திரைகளில் இடைக்கிடையே தோன்றும் விருட்சங்கள் உனக்கு நிழல் தரப்

---

## விடைகள்

1) கொக்குவில் (கொக்கு, வில்)
2) கிளிநொச்சி (கிளி, நொச்சி)
3) கனகராயன்குளம் (கனகராயன், குளம்)
4) கைதடி (கை, தடி)
5) நீர்கொழுப்பு (நீர், கொழும்பு)

**நாகமணி மகேந்திரலிங்கம்**
பழனி, டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

போவதில்லை! அவை நிறம் மாறி நிலை மாறி நிற்கின்றன.'' மரம் தன் உரையாடலை நிறுத்தியது.

''நன்றி! மிக்க நன்றி'' கூறிய படியே எழுந்து போகிறான் இனியன். கடினமான மண்ணைக்கிழித்து சிரமத்தோடு நிமிர்ந்து சிரிக்கும் புதிய செடிகளை அவற்றின் புதிய தளிர்களையே கூர்ந்து பார்க்கிறான். குந்தியிருந்து கூர்ந்து நோக்குகிறான்: கைகள் இரண்டும் காவலரண்களாய் செடியின் இரு புறமும் நகர்கின்றன. நிமிர்ந்து பெருவிருட்சத்தை ஒரு முறை நோக்குகிறான்.

'நன்றி! என் இனிய நன்றிகள் நண்பனே!' மரம் சொல்லிக் கொண்டே உற்சாகமாய் சிலிர்த்துக் கொள்கிறது.

## அகர முதல எழுத்தெல்லாம் அன்னை முதற்றே உலகு

அ. அன்பின் அடையாள முத்திரை

ஆ. ஆத்மாவின் பிறப்பிடம்

இ. இன்பங்களை எமக்காக்கி இடுக்கண் தாங்குபவள்.

ஈ. ஈரேழு உலகமும் அளித்தாலும் கிடைக்காத சொத்து.

உ. உரம் ஏற்றி தன் உதிரம் தந்தவள்.

ஊ. ஊன்று கோலாய் வாழ்ந்து ஊன் அழிந்தவள்.

எ. எம்விழி உறங்க தன்விழியில் உதிரம் சேர்த்தவள்.

ஏ. ஏழேள் லோகமும் தாங்காத பாரம் அன்னை ஒரு நாள் சுமை.

ஐ. ஐயம் அறவே அற்றது அன்னை அன்பு

ஒ. ஒளியேற்ற நம்வாழ்வில், தான் இருண்டு மகிழ்ந்தவள்.

ஓ. ஓங்காரமாய் ஒலிக்கும் இறைவனே அன்னை.

ஔ. ஔடதம் எமக்களித்து தான் நஞ்சுண்டவள்

அ. உதயகுமாரி

ஆசிரியர்:- ஆறுகள் எப்படி உருவாகிறது?

மாணவர்:- மூன்றை இரண்டால் பெருக்கும் போது சேர்

நா. மகேந்திரலிங்கம்
கோப்பாய்.

Adapt yourself to the things among which your lot has been cast and love sincerely the fellow creatures with whom destiny has ordained that you shall live.

-Marcus Aurelius

எவருடன் இருக்க வேண்டும் என்று விதி உனக்குக் கட்டளையிட்டிருக்கிறதோ அவர்களை மனமார நேசிப்பாயாக. எந்தச் சூழ்நிலை உனக்கு விதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு ஏற்ப உன்னை மாற்றிக் கொள்.

மார்க்கஸ் அரேலியஸ்

ஆசிரியர்– ராமு இதில இலங்கை எங்கை இருக்கின்றது என்று காட்டு.

ராமு– உயிர் போனாலும் என் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கமாட்டேன் சார்.

கரவை. தனு

# மறையாத மனித உறவுகள்

- ஷண் -

**சுந்தரனில் காட்டூன் மூலம் கருத்துக்களைச் சொல்லிவரும் சி. கு: என்ற பாத்திரம் வித்துவான் சி. குமாரசுவாமி அவர்களையே சுட்டும். அந்த மாமனி தனைப்பற்றி 'ஷண்' என்ற பெயரில் இன்னொரு கல்விமான் எழுதிய கருத்து ஒன்றைக் கீழே தருகிறோம்.**

''இரண்டு வரம் வேண்டும் இறைவனிடம் கேட்பேன், நினைத்து வாழ ஒன்று, மறந்து வாழ ஒன்று'' என்று ஒரு கவிஞர் பாடினார். ஆனால் ஒரு மனத்தில் அடிமனமும் மேல் மனமும் இருக்கின்றன. கடந்தகால நினைவுகள் அடிமனதில் சேமிக்கப்பட; நிகழ் கால நினைவுகள் மேல் மனதில் பதிவாகின்றன. இதை விட உயர் நிலைமனம் என்ற ஒன்றும் உண்டு. அது பேரறிவோடு சார்புடையது. முக்காலத்தையும் உணர்த்துவது. இந்தமனம் பேரறிவாளர்களுக்கே சாத்தியமாகும்.

சிலரின் ஆளுமையையும், அவர்களுடைய செயல்களையும் மீண்டும் மீண்டும் நினைந்து நினைந்து அவர்கள் இவ்வுலகை விட்டுப் போன பின்பும் ஞாபகப்படுத்திக் கொள்வது மகிழ்ச்சியையும் உளப்பூரிப்பையும் தருகிறது. இந்த வகையில் வித்துவான் சி. குமாரசுவாமி அவர்களுடைய நினைவும் அடிக்கடி அவரோடு பழகியவர் மத்தியில் அலைமோதுகின்றது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபரில் இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணத்திற்கு வந்த போது சி. கு. அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்று நல்லூர்க் கந்தன் ஆலய முன்றில் ஒரு பலசரக்குக் கடை வைத்திருந்தார். கடை என்று சொல்வதை விட அதை ஒரு அற நிலையம் என்று கூறுவதே பொருந்தும்.

இந்தியப் படை வந்த போது நல்லூர் ஆலயம் அகதிகளால் நிரம்பி வழிந்தது. எல்லோரும் கந்தன் கழலடியே தஞ்சம் என்று கிடந்தனர். அந்தக் கழலடியில், அற்றாரையும் அலர்ந்தாரையும் ஆதரித்து, உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், அன்றறிவாம் என்னாது அறஞ்செய்தவர் சி. கு. அவர்கள்.

சித்தர் செல்லப்பரின் சமாதி இருக்கும் இடத்தில் வசித்த ஒரு இளைஞன் சி. கு. வுடன் நல்ல உறவு பூண்டவர். முகமும் அகமும் நக நடப்பவர். காலை வேளைகளில் சுடச்சுடத் தோசை வரும். சி. கு.வின் கடையில் இதற்கெனச் சிலர் காத்து நிற்பார்கள். தாய் சேய்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது போல் எல்லாருக்கும் ஏதோ கிடைக்கும். சுடு நீரும், தேநீரும் கூடக் கிடைக்கும். இரகசியமாகக் கேட்பவர்களுக்குக் கைமாற்றும் சி. கு கொடுப்பார் 'என்ன சி. கு. இதெல்லாம் திரும்பி வருமா?' என்று கேட்டால்,

'அற்றார்க்கு ஒன்று ஈதல் அஃதொருவன் பெற்றான் பெருவைப்புழி' என்று கூறுவார். நான் ஒரு வங்கியில் (வைப்புழி) போடுகிறேன், பின்னுக்கு அது எனக்கு வரும் என்று கூறுவார்.

தராசில் பொருட்களை நிறுத்துக்கொண்டு பக்கத்திலே பாடம் கேட்க வந்த பிள்ளைக்குப் படிப்பித்தலும் நடக்கும். வெள்ளி, செவ்வாய் என்றால் கந்தன் வீதியில் சி. கு. அங்கப் பிரதிஷ்டையும் செய்து விட்டு அதே உடுப்புடன் வியாபாரமும் செய்வார். விற்கும் பொருட்களுடன் அருள் ஆசியும் செல்லும் போலும்.

பக்கத்தில் அடியார்களின் பாதணிகளும் குவியலாகக் கிடக்கும். அதற்கும் இவர்தான் காவல். தற்செயலாக அவை தவறிவிட்டால் கடையில் இருக்கும் புதிய சோடி ஒன்று அவர்களுக்குக் கிடைக்கும். என்ன மனிதனப்பா இவர்! இந்தக் காலத்தில் இப்படியும் ...... என்று பார்ப்பவர் அவரின் செயலை விதந்துரைப்பார்கள். இவற்றிற்குச் சி. கு. காது கொடுப்பது கிடையாது. நல்ல மனித உறவுகள் மறக்கப்படக் கூடுமோ?

# மனிதப் புதையல்.....!

''கடவுள் என்னிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்து கொண்டார். மரணத்தைத் தவிர வேறு ஒன்றும் என்னிடம் இல்லை'' என்று ஒரு இளைஞன் புலம்பிக்கொண்டிருந்தான்.

இதை ஒரு பிச்சைக்காரன் கேட்டுக்கொண்டிருந்தான்.

இளைஞனிடம் சொன்னான்:

'உன்னிடம் மறைந்திருக்கும் ஒரு அரிய பொக்கிஷத்தை நான் காண்கிறேன். அதை நீ விற்பாயா? அதை நீ விற்பதால் அடைய முடியாத எல்லாவற்றையும் நீ அடைவாய்! கடவுளுக்கும் கெட்ட பெயர் ஏற்படாது!' என்றான்.

இளைஞன் ஆச்சரியமடைந்தான்

'பொக்கிஷமா? என்னிடமா? என்னிடம் ஒரு பைசா கூட இல்லையே' என்றான்.

பிச்சைக்காரன் சிரித்தான்; குலுங்கக் குலுங்கச் சிரித்தான். பிறகு சொன்னான்:

'என்னுடன் நீ வா. நாம் அரசனிடம் செல்வோம். அரசன் மிகவும் கெட்டிக்காரன். திறமைசாலி. மறைந்து கிடக்கும் திரவியம் என்றால் அதில் அவனுக்கு ஒரு கண். அவன் நிச்சயமாக உன்னுடைய பொருள்களை நல்ல விலைக்கு வாங்கிக் கொள்வான். இதற்குமுன்பு கூட நான் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்களை விற்கும் பலரை அரசனிடம் அழைத்துச் சென்றுள்ளேன். நல்ல விலை கொடுத்தான்!'

இளைஞனால் பிச்சைக்காரனுடைய கூற்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை. புதிராக இருந்தது அவனுக்கு.

இருந்தாலும் அவன் பிச்சைக்காரனுடன் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான்.

வழியில் பிச்சைக்காரன் சொன்னான்:

''நாம் முன்னதாக சில விஷயங்களைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும். ஏனெனில் அரசன் முன்பு நாம் சண்டையிடக் கூடாது. அரசன் விரும்புகின்ற பொருளை என்ன விலையானாலும் விடமாட்டான். ஆகவே அந்தப் பொருளை நீ விற்பதற்குத் தயாரா? இல்லையா என்பதை முடிவு செய்ய வேண்டியது அவசியம்!'' என்றான்.

''என்னிடமா? பொக்கிஷமா?'' மீண்டும் ஆச்சரியம் அடைந்தான் இளைஞன்.

பிச்சைக்காரன் சொன்னான்:

''உதாரணமாக உன்னுடைய கண்களை எடுத்துக் கொள். அதற்கு நீ என்ன விலை கேட்பாய்? நான் அரசனிடமிருந்து 50,000 ரூபாய் வரை வாங்கித் தர முடியும்! இந்தத் தொகை போதுமா? இல்லையென்றால் உன்னுடைய இதயம், அல்லது மூளையைக் கொடுக்கிறாயா? அவைகளுக்காக ஒரு லட்சம் ரூபாய் கூட உனக்குக் கிடைக்கலாம்!''

இளைஞன் மேலும் ஆச்சரியம் அடைந்தான்.

அந்தப் பிச்சைக்காரன் ஒரு பைத்தியம் என்று முடிவு செய்தான்.

''என்ன உளறுகிறாய்? உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? கண்களையும், இருதயத்தையும் மூளையையும் விற்பார்களா? என்ன விலை தந்தாலும் அவைகளை நான் விற்க மாட்டேன். நான் மட்டுமா, யாருமே விற்க மாட்டார்கள்'' என்றான்.

இளைஞன் கூறியதைக் கேட்டு பிச்சைக்காரன் கடகடவென்று சிரித்தான். பிறகு சொன்னான்:

''பைத்தியமாகி விட்டது நானா? நீயா? இலட்சக்கணக்கான ரூபாய் - கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களை விற்க மறுக்கின்ற நீ, ஏன் ஏழையைப் போல் பாசாங்கு செய்கிறாய்?''

○

தட்டுங்கள் திறக்கப்படும் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கேள்விகள் எதிர் பார்க்கப்படுகின்றன. சிறந்த கேள்விகளுக்குப் பரிசு உண்டு.

# சிரிக்கக் கற்றுக்கொடு மகனே!

முன்னொரு காலத்தில்
மகனே,
அவர்கள் இதயத்தோடு சிரிப்பார்கள்.
கண்களால் சிரிப்பார்கள்.
ஆனால் இப்போது
பற்களால் மட்டுமே சிரிக்கிறார்கள்.

அவர்களது பனிக்கட்டி மூடிய
சில்லிட்ட கண்கள்
என் நிழல்களுக்குப் பின்னாலும்
துழாவுகின்றன.
அவர்கள் தங்கள் இதயங்களோடு
கை குலுக்கிய காலங்கள்
இருக்கத்தான் செய்தன.

என் மகனே, குழந்தாய்
இப்போது அவர்களின் வலதுகை
இதயமில்லாமல் குலுக்குகிறபோது
இடதுகை
என் காலி சட்டைப்பைகளை
துழாவுகின்றன.

'உங்கள் வீடாக நினைத்துக்கொள்ளுங்கள்'
'மீண்டும் வருக'
என்று சொல்கிறார்கள்.

ஆனால்,
நான் மீண்டும் வந்து
தன் வீடாக நினைக்கிறபோது
ஒருமுறை, இருமுறை
மூன்றாவது முறை இருக்கப்போவதில்லை.
ஏனெனில்
கதவுகள் எனக்காக மூடிக்கொள்கின்றன -

நான் பலவற்றைக் கற்றுக்கொண்டேன்.
மகனே, நான் பல முகங்களை
அணியக் கற்றுக் கொண்டேன்.
அடிக்கடி மாற்றும் உடைகளைப்போல -
வீட்டுமுகம், அலுவலக முகம்,
நடுத்தெருமுகம், விருந்து முகம்,
மது அருந்தும் முகம் என்று -
படங்களில் நிலையாக இருக்கும்
சிரிப்புகளைப்போல
உறுதி அளிக்கும் சிரிப்புகள்.

என்னை நம்பு மகனே,
நான்
உன்னைப்போல இருந்தபோது
எப்படி இருந்தேனோ
அப்படியே இருக்க விரும்புகிறேன்.
இந்த ஊமைச் செய்திகள் அனைத்தையும்
மறக்க விரும்புகிறேன்.

சிரிப்பது எப்படி என்று
மீண்டும் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.
ஏனெனில்
நான் கண்ணாடியில் சிரிக்கிறபோது
என் பற்கள்
பாம்பின் நச்சுப்பற்கள் போல்
தெரிகின்றன.

மகனே, குழந்தாய்
எப்படிச் சிரிப்பது என்று
எனக்குக் காட்டு.
ஒரு காலத்தில்
நான் உன்னைப்போல் இருந்தபோது
எப்படிச் சிரித்தேன் என்று
எனக்குக் காட்டு, மகனே. ●

மொழிபெயர்ப்பு:
- இந்திரன்

நன்றி: அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்

# 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி-2

## பரிசு ரூபா 200/-

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையெழுதிப் பரிசினை வெல்லுங்கள். உங்கள் விடைகளை ஒரு தாளிலேயே நிரப்பி 'சுந்தரன்' 252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05 - 06 - 1998க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். உங்கள் கடித உறையின் மேல்பகுதியில் 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி – 2 எனக் குறிப்பிடவும். ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து, ஒழுங்கு, விடையளிக்கப்பட்டமுறை போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. 'உலகத்தின் கூரை' என்பது எதனை?
2. உலகச் சுற்றாடல் தினம் யாது?
3. சிங்கராஜாக்காடு எங்குள்ளது?
4. யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் யார்?
5. அம்பயர்மானி என்றால் யாது?
6. வால்பு நுழைவழியூடாகச் சிலிண்டருக்குச் சரியான அளவு பெற்றலை அனுப்புவது எது?
7. விடுபட்ட இலக்கம் யாது?

| | | |
|---|---|---|
| 2 3 4 | ( 3 3 3 ) | 5 6 7 |
| 3 4 5 | ( ? ) | 6 7 8 |

8.

| | | |
|---|---|---|
| 15 | 17 | 19 |
| 17 | 13 | 5 |
| 8 | 10 | ? |

9.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 7 | 13 | 21 | ? |
| 5 | 20 | 51 | 104 | ? |

10. முறிகண்டி எங்குள்ளது? அதன் முக்கியத்துவம் யாது?

ஆசிரியர்,

சுந்தரன்,

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உங்கள் அன்பு உள்ளங்களை

ஒருநொடியில்

உங்களோடு இணைத்துவிடும்
எங்கள் சேவை:

ஜே. எஸ். பி.

தொலைத்தொடர்புச் சேவை

J. S. B. Communication

272, Stanley Road,
Jaffna.